மாதர் மறுமணம்

"MATHAR MARUMANAM."



மலர் 3. இதழ் 6.

வெகுதானிய தை

Annas 1½. 10 Cts.

"மாதர் மறுமணம்"

விற்பனை ஏஜெண்டுகள்.

1. இந்தியன் நாஷனல் நியூஸ் மார்ட், 89 சர்ச் ஸ்ட்ரீட். ஸ்லேவ் அயலண்ட், கொழும்பு.
2. நியூஸ் மார்ட் சப் ஏஜெண்ட், 8, 9 வார்ட் ஸ்ட்ரீட், கண்டி.
3. நவீன கதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்.
4. மு. முகம்மதலி, 208-A சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

"மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு	...	ரூ.	1—0—0
பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய வெளிநாட்டுக்கு	...	ரூ.	1—8—0
தனிப்பிரதி	... ...	ரூ.	0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,

மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

உள்ளுறை

அன்னையின் கட்டளை! (பாட்டு) —C. N. விகடன்	....	1
பெண்கள் —டார்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை	....	3
இந்து விதவைகள் —மதன் மோகன புஷ்கரண	....	7
உண்மை உழைப்பு வேண்டும் —T. K. முத்து செட்டியார்	....	9
பெண்களும் சிறைச்சாலை நிர்வாகமும் —டி எம். நார்த் கிராப்ட்	....	11
இது கடவுளின் கட்டளையா? —ப. நீ.	....	12
பல தாரமும் விவாக ரத்தும் —ஸ்ரீமதி கே. லட்சுமி பாரதி எம். எல். ஏ.	....	15
வேளாள யுவர்களுக்கு —எஸ். தங்கசாமி	....	23
ராணி சாந்த் பீபி	....	25
கர்ப்பமுற்ற தாய் —டாக்டர் பேர்னுண்டஸ்	....	30
காதலின் தியாகம் —டி. யஸ். மதுரம்	....	33
செங்குந்த மரபினர்க்கு —பே. மு. கிருஷ்ணன்	....	36
அகில இந்திய மாதர் மகாநாடு	....	39
மதிப்புரை	....	44
நிகழ்ச்சிகள் ...	....	46

குமரன் புத்தகசாலை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

மனம்போல வாழ்வு	0-8-0
திருக்குறள் (அறத்துப்பால்)	1-0 0
மெய்யறம்	0-8-0
சாந்திக்கு மார்க்கம்	0-8-0
அகமே புறம்	0-8-0
மெய்யறிவு	0-8-0

வ. வே. சு. ஐயர் எழுதியது.

சந்திரகுப்த சரித்திரம்	0-6-0

மகேசகுமார சர்மா எழுதியது.

வால்மீகி விஜயம்	0-12-0

இதர புத்தகங்கள்

ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும்	6-0-0
நைடதம் மூலமும் உரையும்	4-0-0
சிதம்பர ரகசியம்	0-8-0
உப்பள முற்றுகை	0-4-0
பக்தியோகம்	0-8-0
தேவோபாசன தீபம்	0-6-0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை)	0-4-0
மநுநீதி மர்மம்	0-2-0
ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்)	0-4-0
இகபரஞானசாகரத் திரட்டு	0-6-0
பெரிய விக்கிரமாதித்தன் கதை	1-0-0
தாசிகள் மோச வலை (நாவல்)	1-4-0
நந்தனார் கீர்த்தனை	0-4-0
தோத்திரக்கோவை	0-6-0
இராமாயண ஆராய்ச்சி	0 4-0
சொர்னவல்லி	0-12-0
கூழைராங்கன்	0-12-0
அமிர்தவல்லிமாலை	0-4-0
நமது பலசரக்குக்கடை	0-6-0
நாயன்மார்	0-3-0
குட்டிச்சாத்தான் கட்டுரைகள்	0-3-0
பதிற்றுப்பத்தந்தாதி	0-3-0
மாதர் மறுமணம்	0-4-0
பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம்	0-12-0
மானநஷ்ட வழக்கு	0-1-0
ஜீவகாருண்யத்திருக்குறள்	0-0.6
ஜீவகாருண்யப் பாடல் திரட்டு	0-3-0
சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள்	0-2-0
கைம்பெண்ணின் கண்ணீர்	0-1-0
தேசீய கீதங்கள்	0-2-0
காசில்லாமல் உபதேசம்	0-1-0
பலதிரட்டு	0-0-1
கடவுளும் கோயிலும்	0-1-0
சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு	0-4-0
சைவசமய சாரம்	0-1-0
சுயராஜ்யம் யாருக்கு?	0-1-0
மாதர் மறுமணம் பாடல் திரட்டு	0-2-0
அநியாயக் கல்யாணம்	0-0-6
இரண்டு கட்டுரைகள்	0-1-0
தமயந்தி நாவல்	0-8-0
சோதிடப் புரட்டு	0-2-0
சுயமரியாதைத் தாலாட்டு	0-2-0
புராண ஆபாசங்கள்	0-3-0
ராமலிங்க சுவாமி பாடல்	0-2-0
சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்	0-3-0
சுயமரியாதைப் பாடல்	0-2-0

மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.

மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

மலர் 3	காரைக்குடி வெகுதானிய-ஸூ தை-மீ	இதழ் 6

அன்னையின் கட்டளை!

(C. N. விகடன்)

கும்மி

தண்டமிழ்த் தென்றலின் வேகத்திலே வருந்,
* தருச்செடிப் பூங்கொடி வாசத்திலே!
விண்டல வயிரங்கள் மின்மினுக்க ஒளி
வீசி எழுந்திடு நன்னிலவு!

கனிதமிழ்க் கட்டுரைக் காவியங்கள் நற்
கலைரசக் காதலின் மாகதைகள்!
நனிமிகு கற்பனை லோகத்திலே மனம்
நாடிடத் தனிமையில் நானிருந்தேன்!

மின்னற்கொடியின் மேன்மை யென திரு
மேனியே வாய்ந்ததோர் பெண்ணழகு!
கன்னல்மொழித் தமிழ்ப் பேச்சுடனே வரக்
கண்டுமே யாச்சர்யங் கொண்டிருந்தேன்!

பாலைப்பிளந்த சிரிப்பினிலே எனைப்
பார்த்துரைப்பா ளந்தவேளை யிலே!
காளையென்மகனே நீயுமிப்போ நான்
கழறுந் தொண்டினைக் கேட்டிடுவாய்!

* தரு—மரம்.

உன்போன்ற மக்களே யொன்றுகூடி மிக
உவந்து செய்யவே இந்தத் தொண்டு!
பொன்போன்ற மொழிகளைக் கேட்டுநீயும்
போற்றித்திடு நற்றமிழ்க் குமரனிலே!

மாதர்மறுமணச் சீர்திருத்தம் தமிழ்
மாட்சிக ளொளிர்ந்திடு கல்விகலை!
சாதகச் சமத்துவச் சொத்துரிமை இவை
சாதிக்கவேண்டிடுங் கால மிதில்!

பணிகளே செய்திடக் கூடிடுங்கள் மிகப்
பரவசவூக்கமே காட்டிடுங்கள்!
துணிந்துநற் செய்கைக ளாக்கிடுங்கள் பெண்
துக்கங்கள் யாவையு மோட்டிடுங் கள்!

இந்தத்திருப்பணி யாற்றிடவே தமிழ்
இன்னெழில் பெற்றிடும் மார்க்கமடா!
செந்தமிழ்க் கற்பனை விட்டிடடா நான்
செப்பிய வார்த்தைகள் போற்றிடடா!

அன்னையின் கட்டளை மிகமிகச்சரி பெண்
அறிவினில் தமிழ்க்கதி ரேமிளிரும்!
நன்நயப்பெண்குல மோங்கிடவே இந்
நாட்டினர் நற்பணி தழைத்திடவே!

விதவை கண்ணீர்
வீட்டை அழிக்கும்

பெண்கள்

(தென்னப்ரிக்கா, டர்பன்
திரு. ச. முனிஸ்வாமிபிள்ளை அவர்கள் எழுதியது.)

உயிர்நூல், உள நூற்களை யொட்டியவரையிலும் ஆண் பெண்களுக்குள் அதிக வித்தியாசமில்லை; பெண்ணிடம் ஆண்மையும், ஆணிடம் பெண்மையும் உள; ஆண் பாலரிடமுள்ள சக்திகளிற் பெரும்பான்மையும் பெண்ணிடமுமுள; அதாவது, புலன்களின் போக்கு, உணர்ச்சி, மனப்பயிற்சி, விவேகம், ஞானம் முதலானவைகளை யொட்டியவரையிலும் யாதொரு பேதமுமில்லை. இவ்விரு பாலரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவரானாலும், அதாவது மன இருதயங்களின் அமைப்பு, போக்கு ஞானம் முதலானவைகளைப் பொறுத்தவரையிலும் அவர்கள் சம முள்ளவர்களைப்போல தோன்றினும், உடலமைப்பிலும், அம் மன இருதயங்களினின்று, அகோசரமாய் வெளிப்படும் குணவொழுக்கங்களிலும் அவ்விரு பாலருக்குள் தெளிவான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஆனால் அப் பேதங்கள் பரஸ்பர அன்பு, இணக்கம், இன்பமாகியவைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய சக்தி பொருந்தியனவே யல்லாது விரோதத்தையும், பிரிவையும் விளைவிப்பனவல்ல. வாழ்க்கை நாடகத்தை அவ்விருவரும் ஒவ்வோர் விதத்திலும், இறுதியில் ஐக்கியமும் ஆனந்தமுமே உண்டாகும்படிக்கும் ஆடிவருகிறார்கள்.

ஆண் பெண்களுள் எவர் மிக்க மேலானவர் என உசாவுதலிலும், அன்னையைவிடப் பிதா மிகவும் பிரதானமா? சகோதரனைவிடச் சகோதரி பெரும் புகழ்ச்சிக்குரியவளா?—என வினவிக்கொண்டிருப்பதிலும் பயனென்ன? ஆணும் பெண்ணுமில்லாது குடும்பமும் சங்கமும், ராஜ்யமுமில்லை. இவர்களுள் ஒருவரிடமில்லாத அரிய பெரிய குணாதிசயங்கள் மற்றவரிடமிருக்கின்றன. மனிதன் செயற்கையாளன்; உலகாதிகளின் தாரதரங்களை ஆராய்ந்து, பரீக்ஷித்துத் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தறிபவன்; பாதுகாத்து ரக்ஷித்தற்கான சக்தி பொருந்தியவன்; உண்டுபண்ணுதற்கும், ஆழ விசாரித்தற்குமான புத்திவளப்பமும், மன வலிமையும் நிரம்பியவன்

நன்மை பயப்பவைகளைச் சோதித்துப் பார்த்துப் பரப்புவதற்கும், தர்ம ஸ்தாபனத்திற்குமான மார்க்கங்களை ஆய்ந்தோய்ந்து அறிந்து இடையில் தோன்றும் தடைகளையும் இடுக்கண்களையும் எதிர்த்து அடக்குவதற்குமான மூளையும் தேகபுஷ்டியும் உடையவன்.

பெண்ணோ பொருள், விஷயங்களின் தாரதம்மியங்களைத் தன் சுயவறிவு, அல்லது மதி யூகத்தினால் கிரகித்து, மனிதன் செய்யும் பிரமாண்டமான காரியங்களில், ஆங்காங்கு அவ்வப்போது காணப்படும் குற்றங்குறைகளை எடுத்துக்கூறி, ஒழுங்குபடுத்தி, இல்லத்திலும் வெளியிலும் சமாதானம் இனிமை, சீர், ஆனந்தம் என்பன வாதிகளை அபிவிருத்தித்து நிரப்புவதற்கும் நன்மை, நேர்த்தி, மேன்மை நேர்மையானவைகளைக் கண்ணுற்றமாத்திரத்தில் புகழ்ந்து, அவைகளி னிமித்தம் உழைப்பவர்களைத் தைரியப்படுத்தி, எழுப்பி, மேற்செல்லத் தூண்டுதற்கும் வேண்டிய குணம் மிக்கவள். பொறுமையும் அன்பும், தயாளத்துவமும், ஆத்மார்ப்பணமுமே அவர்களுடைய ஆதாரமாகவும் சிரோபூஷணங்களாகவும் விளங்குவன. இவ் விரு திறக் குணாதிசயங்களின் இணக்கமே இன்பத்தின் விளை நிலமாகவும், பரோபகாரத்தின் ஆணிவேராகவும், இல்லறத்தின் அஸ்திவாரமாகவும், முக்தியின் விதையாகவும் உள்ளது.

சோம்பல், தரித்திரம், அவிவேகம், காமக்குரோதங்களின் திரக்ஷியான காரிருளை நீக்கும் ஒளியே கற்பு என்பது. மனச்சோர்வையும் அப்புறப்படுத்தி, பலம், ஆரோக்கியம், வீரியம், இன்பம் என்பவைகளைப் பரப்புவது விநயம். பரஸ்பர அன்பு அல்லது விசுவாசம் என்பது வன்சொல், இகழ்ச்சி, பொறாமை, வருத்தம், ஏக்கம், பிணி வறுமையாகியவைகளை நசிப்பிப்பதாகும் பேரலைகளாலும் சண்ட மாருதத்தினாலும், தாக்கப்பட்டுக் கலங்கும் மரக்கலத்திற்கு எவ்வாறு தீபஸ்தம்பம் உதவுகின்றதோ, அவ்வாறே, வெளியில் ஆசாபாசங்களாலும், அவலக் கவலைகளாலும், ஐயம் தோல்வி, துவேஷம் பழிச்சொற்களாலும் பாதிக்கப்பட்டு அலப்புறும் மனிதனுக்கு உதவுபவள் பெண்ணே. க்ஷேமம், அமைதி, நம்பிக்கையாகியவைகளை யளிக்கும் அரண்களுக்கும் மேலாக விளங்குபவள் பெண்ணன்றோ? தூஷணையாகிய விஷ அம்பைக் கற்பினால் தகித்து, புண்ணடைந்த நெஞ்சை யாழினு மினிய மொழிகளால் ஆற்றுவித்து இனித்திருக்கச் செய்வது நற்பெண்ணன்றோ?

எண்ணிறந்த நன்மைகளும், சுகபோக வின்பங்களும் ஜனித்து வளர்ந்து, பெருகி, உறையும் இடமே இல்லம் என்பது. சண்டை சச்சரவுகளும், வாக்குவாதங்களும், பிணக்கமும் கிரகத்துள்ளும் நிலவத் தலைப்படுமாயின், இதற்கும் வெளியிடங்களுக்குமுள்ள வித்தியாசம் யாதோ? அலர்ந்த முகமும், ஆனந்தக் கண்ணும், கனிந்த உள்ளமும், கோதில் மனமும், தெளிந்த விவேகமும், ரம்மிய வொழுக்கங்களுமுடைய நன்மனையாளுக்கு அவளுடைய கணவன் அளிக்கும் பிரதி பலன் என்னே? நானுவித இன்னல்கள், துர்ச் சம்பவங்களினின்று காப்பாற்றி, இல்லறத்தை ஒத்த மனத்துடன் நடாத்த உதவுதலேயாம்.

பிள்ளைகளின் மூதற்குரு மாதா. பிள்ளைகளின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அவர்களுடைய தாயின் குண நடத்தைகளைப் பொறுத்துள. குழந்தைகள் தன் ஆதீனத்திலிருக்கையில், இம்மை மறுமைகளுக்கான கல்வியையும் வழிகளையும் அவர்களுக்குப் போதிக்காது அவமே இருந்துவிடின், அல்லது குழந்தைகளின் துஷ்டப்போக்குகளையே அநுசரித்து, கண்டிக்கவேண்டியபொழுது கண்டிக்காது, தவறுகையில் திருத்தி உயர்த்தாது இருந்துவிடின் பின் பிதாவினுலும், தீர்ந்த வித்வர்களாலும் அப்பிள்ளைகளை நல்வழியில் திருப்பி நிறுத்துவதற்கு முடியாது. பெற்ரோர்களின் அஜாக்கிரதை, அலக்ஷியம், பாராமுகத்தினுல் எவ்வளவு பிள்ளைகள் போலி மனிதராய், விலங்குகளுக்குங் கடையராய் மாறிவிடுகின்றனர்! ஒவ்வொரு ஜீவனும் இழைத்த கர்மங்களின் தொகுதியான விதிக்குத் தக்கபடி, அதாவது நல்லூழாயின் மேன்மேல் வளர்ந்து உய்யவும், போகூழானுல் தளர்வுறு முயற்சிகளாலும், நல்லப்பியாசங்களாலும் இன்னலிடர்களை வென்று மேலெழும்பவும் அநுகூலிக்கக் கூடியதாய் தந்தையரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் பிறக்கின்றது. இதையறிந்து தக்கபடி உதவிபுரியாமல், குரங்கின் கைப் பூமாலைபோல் அக்குழந்தைகளை நடைப்பிணங்களாக்கியபின், "பிள்ளையின் தலையெழுத்து, விதி, பிராப்தம் இவ்விதம்போலும்"! என ஓலமிடுதல் தகுதியோ?

தேச சரிதம், சரீர சாஸ்திரம், தர்ம அறிவு, சுகாதார விளக்கம், உளநூற் பயிற்சி முதலியவைகளைப் புகட்டும் புத்தகங்களைப்

படிக்கவேண்டியது பெண்பாலர்க்கும் அத்தியாவசியமேயாம். அவைகளைப் பெற்று அநுபவித்தற்கான உரிமையும், சுதந்திரமும் பெண்களுக்கு முளவென்ற விஷயத்தை எவரும் மறுக்கமுடியாது.

மன இருதயங்களின் தூய்மைக்கும் கிளர்ச்சிக்கும் பிரதான மாவது அன்பு. இன்னல்களைக் குறைத்து, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்றவைகளால் மூடப் பட்ட மனத்தைத் தெளிவித்து நன்னெறியிற் புகுத்தி, யாவர்க்கும் இன்பம் பயப்பதும் பயக்கக் கூடியதும் அன்பேயாம். துயரமா கிய பாறையில் மோதி அவஸ்தைப்படும் புன்மாக்களை அவ்விபத் துக்களினின்று விடுவித்து நன்மை யெய்துதற்கு உதவுவன ஞான மும் அறமுமாம். ஞானத்தின் பயனும், அறங்களுக் கெல்லாம் தலைமையுமாக ஒளிர்வது அன்பே. இத்தகைய அன்பைப் போற்றி இவ்வுலகெங்கும் பரப்புதல் பெண்ணின் குணதிசயமாம்.

வாழ்க்கையின் கஷ்ட நிஷ்டூரங்களை அதிகரிப்பது தற்சிந்தனை யாகும். அக்கொடூரங்களைக் குறைப்பது பரோபகார சிந்தனையே. முன்னது மனிதனிடம் மேம்பட்டு நிற்கின்றது. பின்னது பெண் ணிடம் பரிணமித்திருக்கின்றது. இவ்வுலக வாழ்க்கையின் நண்ப ரும், முக்திக் கேதுவுமாக வுள்ளவை தியாக சிந்தையும், அன் பும், இரக்கமும், ஒத்துழைப்புமே யாம். இவைகளைப் பெறுமிடம் பள்ளிக்கூடமல்ல; கற்பிப்பவர்கள் வாத்திமா ரல்லர்; சாதநங் கள் புத்தகங்களல்ல. ஆனால் இல்லமும் அன்னையும், இவற்றி னின்று எழும்பும் இனிய வார்த்தையும் அன்புமிக்க செயல்களும், நல்லெண்ணங்களுமே யாம். தேசாபிமானமும், ஒற்றுமையும் இல் லத்தினின்றே உதித்துப் பரவுவன வென்பதை அநேக சரிதங்கள் நிரூபிக்கின்றன.

“மாதர்களுக்குச் சுதந்திரம் அழகல்ல; சமத்துவம் தேவை யல்ல; கல்வி நிஷ்பிரயோசன மானது; மனம், இருதயம், அறிவு, உணர்ச்சி, ஆன்மா என்றவைகளைப் பெற்றிராத ஜடப் பொருள் கள்; பிள்ளைபெறும் இயந்திரங்கள்; ஆடவரின் அடிமைகள்” எனச்சாதிப்பது கூடாது. இக பர சாதனங்களைப் பலவிதத்தில் பரி பூரணமாகப் பெற்று நீடூழி வாழ்தற்கே ஆண்பெண் என வகுக்கப் பட்டுள. நரையிரலும், இதயமும், இன்னுமனைய தேகவுறுப்புக்க

ளும் அவற்றிற்கான தொழிலை நிறுத்தி சுதந்திரம், சமத்துவம், உயர்வு, தாழ்வு என்பவைகளைப்பற்றித் தர்க்கிக்கத் தலைப்படுமாயின், சரீரத்தின் கதி யாதாகும்?

இந்து விதவைகள்

(மதன் மோகன் புஷ்கரண.)

உலகிலுள்ள தேசங்கள் யாவற்றிலும் விதவைகளிருக்கின்றார்கள். எல்லாச் சாதிகளிலும் விதவைகளிருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இந்து விதவைகள் போல் கீழான நிலைமையிலிருக்கும் விசித்திரம் நாம் எங்கும் கண்டதில்லை. அவர்களிருக்கும் நிலைமையைப் பார்த்தால், எந்த மனிதனுடைய மனமும் உருகிப் போய்விடாமலிராது. இந்துக்கள் மட்டுமல்ல. பிறரும் இந்து விதவைகளின் கேவலமான நிலைமையைக் கண்டு வருத்தப்படுவதுடன் நம்மையும் கேலி செய்கிறார்கள். நம்முடைய தன்னலமிகுந்த, அநியாயமான, அநாசாரமான சமூகக் கொடுமைகளினால், துன்புறுத்தப்பட்ட எத்தனையோ பெண்கள் தமக்குமட்டுமல்ல, சமூகத்திற்கும் ஒரு இழிவைத் தேடித் தந்துவிடுகிறார்கள். ஆயிரக்கணக்கான பெண்கள் பிரதி வருஷமும் முஸ்லீம்களைச் சரணம் அடைகிறார்கள். அதுபோல் ஆயிரக்கணக்கானவர்கள் வேசிகளின் வலையில் சிக்கி, வேசிகளாய்ப் போய்விடுகிறார்கள். அவர்களின் எஞ்சிய வாழ்க்கை வேசித் தொழிலிலே கழிந்து போய்விடுகிறது.

விவாகம் என்பதே இன்னதென்று அறியாத நிலைமையிலிருக்கும் நான்கு வயதுக் குழந்தைகள் விதவைகளாயிருக்கும் வேடிக்கையை இந்து சமூகம் ஒன்றில்தான் காணலாம். சில பெண்களுக்கு தங்களின் கணவர்கள் யாரென்பது கூடத் தெரியாது. கலியாணம் ஆன இரண்டொரு மாசத்திற்குள் கணவன் இறந்துபோய்விடுவதால் ஏற்படும் தொல்லைகள் பல. விதவையான பெண்களுக்கு வாழ்க்கை எவ்வாறு வாழ்வதென்பது புரியவில்லை. அவர்களுடைய வைதவ்விய காலத்தைக் கழிப்பதற்கு சமூகமும் உதவிகள் செய்துகொடுக்கவில்லை.

பூர்வகாலத்திலிருந்த நிலைமைகளுக்கும் இப்பொழுதிருக்கும் நிலைமைகளுக்கும் அதிக வேற்றுமை யுண்டு. அக்காலத்தில் பால்ய விதவைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. துர்ப்பாக்கியவசத்தால் பால்ய விதவைகள் ஏற்பட்டுவிட்டாலும், அந்தந்தக் குடும்பத்தார்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். விதவையான பெண்களுக்கு உதவி செய்வதற்குத் தயாராகவு மிருந்தார்கள். ஆனால் இக் காலத்தில் அப்படியில்லை. விதவைகளைக் குடும்பத்திலுள்ளவர் கண்ணியமாக நடத்துவதில்லை. எப்படியாவது இந்தச் சனியன் வீட்டைவிட்டுத் தொலைந்தால் நல்லதென்று எண்ணுகிறார்கள். மாமனும் மாமியும், தகப்பனும் தாயும், மாப்பிள்ளையோ, பிள்ளையோ, இறந்துபோன சிறிது காலத்திற்குள், கவலையை மறந்துவிட்டு சந்தோஷமாக, உல்லாசமாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். விதவையாய்ப் போன அபலையின் கஷ்டம் கடவுளுக்குத்தான் தெரியும். ஏன், கொழுந்தன்மார்களே, விதவையான பெண்களைக் கற்பழிக்கத் தயங்குவதில்லை.

இளம் விதவைகளைப் போஷித்துக் காப்பாற்றுவார் யாருமில்லையென்பது இதனால் நிச்சயமாய்த் தெரிகிறது. ஆகையால் அவர்களை மறுமணம் செய்துகொடுத்துவிடுவதே நல்லது. தர்ம சாஸ்திரங்கள் இதைப்பற்றிச் சொல்வதில் மக்களுக்குள் வேற்றுமை இருக்கிறது. சிலர் மாதர் மறுமணத்திற்கு தர்ம சாஸ்திரங்கள் இடம் தருகின்றன என்று சொல்லுகிறார்கள். சிலர் தர்ம சாஸ்திரங்கள் இதற்கு விரோதமாய் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். தர்ம சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லையென்றால், உடனே இந்தக் கேள்வி பிறக்கிறது. ஆடவன் ஒரு மனைவி இருக்கும்போது இன்னொருத்தியைக் கலியாணம் செய்துகொள்ளலாம், பெண் கணவன் இறந்தாலும் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது. இவ்வாறு எந்த தர்ம சாஸ்திரம் ஆஞ்ஞை இடுகிறது? ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேற்றுமையாக ஏன் தர்ம சாஸ்திரங்கள் நீதி சொல்லுகின்றன? இதுவரையில் உலகின் தர்ம-சாஸ்திரம் சொல்லும் முறையும், எழுதும் முறையும் ஆடவர் கைகளிலிருந்தன. அதனால் ஆடவர்கள் பெண்களை அநியாயமாக நடத்துவதற்கு ஹேதுவாயிற்று. சுகம் அனுபவிப்பதற்குக் கடவு

ளால் சிருஷ்டித்துத் தரப்பட்ட பொருள் என்று பெண்களை ஆடவர்கள் எண்ணுகிறார்கள். பெண்கள் ஆண்களுக்கு அடிமையாயிருப்பதோடு, அவர்களுடைய காம இச்சைகளையும் பூர்த்தி செய்யவேண்டும். அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றுத் தரவேண்டியதும் அவர்களுடைய கடமையாகும். மேற்சொன்ன காரியங்களுக்குப் பெண்கள் இணங்காவிட்டால், ஆடவர்கள் பெண்களை இம்சிப்பதோடு, வீட்டைவிட்டுத் துரத்தியும்விடுகிறார்கள்; வேறு மணம் செய்துகொண்டுவிடுகிறார்கள். இது புருஷர்களின் தன்னலத்தையும், மூட நம்பிக்கையையும் காட்டுகின்றது. இதனால் ஏற்படும் கொடுமைகள் பல. ஆதலால் சீர்திருத்தக்காரர்களும் அரசியல் வாதிகளும், இந்தத் துறையில் அதிகமாகத் தங்களின் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

விதவைகளின் எண்ணிக்கை பெருகாமலிருப்பதற்கு, முதலாவதாக விருத்தர்கள் விவாகம் செய்துகொள்வதைத் தடுக்கவேண்டும். மறுமணம் செய்துகொள்ளும் தகுதியுடைய பெண்களை மணம் செய்துகொடுக்க வேண்டும். தகுதியில்லாதவர்கள் கஷ்டமில்லாது வாழ்வதற்குச் சௌகர்யங்கள் செய்துகொடுக்கவேண்டும்.

உண்மை உழைப்பு வேண்டும்

(காதிபந்தார் T. K. முத்து செட்டியார்)

விரை போட்டவுடன் பழம் தின்னப் பார்ப்பது நடக்கிற காரியமாயில்லை. முளை செடியாகி, பூவாகி, பிஞ்சாகி, காயாகி பழமாக வேண்டும். "மகளிர் மறுமணம்" என்ற விதை நட்டு முளை நீண்டு செடியாகி மரமாகத் தோன்றிவிட்டது. இனி பூவும் பிஞ்சுமாகி பழமாகும்வரை செய்வன செய்தாக வேண்டும். நாட்சென்றாலும் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவி வயதுவந்த புத்திமான்கள் மனதில் பட்டு சிறிது சிறிதாகப் பயன் ஏற்பட வேண்டியதாயிருக்கிறது. நாட்டின் பல பாகத்திலும் மகளிர் மறுமணத்தைப் பெரி

யோர்கள் ஆதரித்து வருகிறார்கள். சமீபகாலத்தில் சேலம் ஆரிய வைசிய பிரபலஸ்தர்கள் தேசீய வளர்ச்சிக்கு மேன்மையான இக் கொள்கையை ஒப்புக்கொண்டு அனுஷ்டான முறையில் கொண்டு வரவும் ஆரம்பித்து விட்டார்கள். சில விதவா விவாகங் களும் நடைபெற்றிருப்பது போற்றற்குரியதே. வைதவ் யமடைந்த சிறு மகளிரை வைத்துக்கொண்டு பரிதபித்துக் கொண்டிருக்கும் எல்லா வகுப்பு குடும்பங்களும் ஒத்துழைக்க முன்வரவேண்டும். இதில் ஈடுபடுபவர்கள் மேதாவி என்று சொல் லிக்கொள்ளும் சிலரின் அருவருப்புக்கோ, கோபத்திற்கோ பயந்து கொள்கையை விடாமல் சொந்த புத்தியைக்கொண்டு மகளிர் கஷ் டத்தையும், நிர்பாக்கியவதிகளாய் தாழ்வுற்றிருப்பதைச் சமயம் வாய்க்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் பிரஸ்தாபப்படுத்தி வேலை வனசெய்யப் பின்வாங்கக்கூடாது. குடும்பத்தில் வயதுவந்த முதி யோர்களுக்கு இக்கொள்கை ஆச்சரியமாகத்தானிருக்கும். இக் கொள்கையை அமுலுக்குக் கொண்டுவந்து உடனே பலனை யனுப விக்க மார்க்க மில்லாமலிருப்பதற்கு தொன்று தொட்டு நம் பெரியார்கள் மத சம்பந்தமான கொடுமையையும், நம்மை அடி மைப்படுத்தி வாட்டும் மூட நம்பிக்கையையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களையும் உதறித் தள்ளிவிட்டு காலத்திற்கேற்ப சமூக சீர்திருத்தம் செய்யமுற்படாததே காரணம். நல்லது கெட் டது தெரிந்து சீர்திருத்தத்தின் அவசியத்தை எடுத்துச் சொல் லும் விஷயத்தில் பகுத்தறிவுடைய யாருக்கும் விரோதமாகாது. ஒவ்வொரு ஊரிலும், தற்போது எங்குபார்த்தாலும் அனேக சங் கங்கள் ஏற்பட்டு பொது நன்மைக்கு உழைத்துவருகிறது போற் றத்தக்கதே. "மகளிர் மறுமணம்" போன்ற அநேக அரிய பெரிய விஷயங்களைப் பலபேர்சேர்ந்து ஆலோசனை செய்து பேசவும், தர்க் கிக்கவும் தீர்மானமாகக் கொண்டுவந்து நிறைவேற்றவும் ஜன சமூகத்துக்கு சங்கங்களைப் போல மிகவும் உபயோகமானது பிறி தொன்றில்லை. ஒரு சங்கத்தின் மூலம் ஒரு தீர்மானம் செய்யப் பட்டு ஒரு விஷயம் வெளிவந்தால் அதை ஜனங்கள் போற்றாமலிரு க்க முடியாது. அதற்கு ஒரு தனி கௌரவமும் உண்டு. பல அறி வாளிகள் கூடியோசித்து ஒரு சீர்திருத்தத்தைச் செய்யப் புகுந்தால்

அக்காரியம் எவ்வளவோ பொது மக்கட்கு நன்மையாகவும், சிறப்பாகவும் பலப்பட்டு முடிவுபெறுகிறது. முயற்சி திருவினையாக்கும். ஆகையால் நொந்து பட்டுப்போன மகளிர் விஷயத்தில் இரக்கம் வைத்து உள்ளநாள் உள்ளமட்டும் மங்கி தவிக்காமல் மறுமாலை சூட்டப்பெற்று மகிழ்ந்திருப்பச் செய்வது மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருடையவும் கடமையாகும். படித்த மக்களும், முக்கியமாக வயதுவந்த மாணவர்களும், பணக்காரர்களும் இக்கஷ்ட நிவர்த்திக்கு உண்மையோடு உழைக்க முன்வரவேண்டும்.

பெண்களும் சிறைச்சாலை நிர்வாகமும்

(டி. எம். நார்த் கிராப்ட்.)

வாக்ஸிகோவில் சமீபகாலத்தில், ஸ்வீடிஷ் சிறைச்சாலை கவர்னராக டாக்டர் ரூத் கிரப் என்பவர் நியமிக்கப்பட்டது பல தேசங்களிலும், சிறைச்சாலை நிர்வாகத்தில் பெண்கள் அதிக வெற்றி பெற்றிருப்பதை ஞாபகப்படுத்துகிறது.

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய பெண்கள் சிறை ஹங்கேரியில், கார்பேத்தியன் மலைகளிலிருக்கின்றது. இச்சிறையின் நிர்வாகம் முழுமையும் கன்னிகா ஸ்திரீகள் பொறுப்பிலேயே இருந்து வருகிறது. கன்னிகா ஸ்திரீகளின் தலைவிதான் இதற்கு கவர்னர். அவளுடைய நிர்வாகத்தில் 55 'சகோதரிகள்' ஊழியம் புரிகின்றனர்.

அமெரிக்காவில் பல மாகாணங்களிலும் மாதர் சிறைகளில் பல பெண்கள் கவர்னர்களாக இருக்கின்றார்கள். வெர்ஜீனியா, அல்டர்ஸன் பெண்கள் சமஷ்டி கைத்தொழில் நிலையத்திற்கு டாக்டர் மேரி பி. ஹாரிஸ் என்பவர் சூப்பிரண்டண்டாக இருக்கின்றார்.

ஜர்மனியில் நாஜி ஆட்சி எற்படுமுன் பெர்லினுள்ள ஒரு சிறைக்கு பிராரோஸா ஹெல்பர்ஸ் எனும் பெண்மணி கவர்னராக இருந்தார். அவர் நிர்வாகத்தை எற்ற முதல் வருஷத்திலேயே சிறைச்சாலையில் பல முற்போக்கான அபிவிருத்திகள் செய்தார். ஒரு புதிய நிர்வாக முறையையே அமுலுக்குக் கொண்டுவந்துவிட்

டார். கைதிகளின் சுயமதிப்பைப் பெருக்குவதற்குவேண்டிய முயற்சிகளெடுத்துக்கொண்டார். கைதிகளைக்கைதிகளாக அவர் அழைக்காது, பெயர் சொல்லி மரியாதையாக அழைத்தார். அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த, உபயோகமற்ற, கீழான வேலைகளை நிறுத்தி விட்டு, அவர்கள் விரும்பிய, பிரயோசனமான, தேவையான வேலைகளைக் கொடுத்தார்.

கிரீஸிலும், பிரேஸிலிலுமுள்ள பெண்கள் சிறைகள் எல்லாம் மாதர்களது நிர்வாகத்திலேயே இருக்கின்றன. நார்வே, ஒஸ்லோ பெண்கள் சிறைக்கு பிரோக்கன் ஆஸ்லாங் ஆஸ்லாந்து என்பவர் இன்ஸ்பெக்டராக இருக்கின்றார். ஸ்பானிஷ் புரட்சிக்குப் பிறகு, ஸெனோரிட்டா விக்டோரியா கென்ட் (பார்லிமெண்டு மெம்பர்) ஒரு பிரபல பாரிஸ்டர்—ஸ்பானிஷ் (ஆடவர் சிறைகள் உள்பட) சிறைகளின் டயரக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

கிரேட் பிரிட்டனிலும் பல பெண்கள் சிறைச்சாலை கவர்னர்களாக இருந்திருக்கின்றனர். முதன்முதல் இப்பதவி வகித்தது மிஸ் லிலியன் பார்க்கர் ஸி. பி. இ., ஜே. பி. என்ற பெண்மணியாகும். 1935ல் இவர் சிறைகளின் உதவிக் கமிஷனராக நியமிக்கப்பட்ட பொழுது, அவருடைய ஸ்தானத்தில் மிஸ் யம் மெல்லின்பி என்ற பெண்மணி நியமிக்கப்பட்டார். லண்டனிலும் மாகாணங்களிலும் உள்ள பெண்கள் சிறைகளில், பெண்கள் டிப்டி கவர்னர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இது கடவுளின் கட்டளையா?

(ப. நீ.)

ஒரு விதவைக்கு திருமணம் நடத்த முயற்சித்தால், அல்லது நடத்திவிட்டால், அது கடவுளின் எண்ணத்திற்கு, கடவுளின் ஆக்ஞைக்கு, அவரால் எழுதப்பட்ட தலை எழுத்திற்கு விரோதமாக நடந்ததாக வைதிகர்கள் கருதுகின்றனர்; சொல்கின்றனர். வயது வந்த ஆண்களும், பெண்களும், ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலோர் ஒருவள் விதவையாவது கடவுளின் கட்டளை என்றே கருது

கின்றனர். அந்தத் "தலையெழுத்தை" அழிக்க—மாற்ற—திருத்தியமைக்க முயற்சிப்பதே பெரும் பாவமென்றும், குற்றமென்றும் கருதுகின்றனர்.

இந்துதேசத்தில், இந்துக்களிடமே விதவைக் கொடுமை இருக்கிறது. உயர்ஜாதியெனச் சொல்லிக்கொண்டு, கீழ்ச்சாதியாரென்று சொல்லப்படும் பல வகுப்பினரிடையே புனர் விவாகம் இருந்துவருகிறது. ஒருவனுடைய மனைவி யிறந்ததும் எவ்வாறு சர்வ சாதாரணமாக மறு விவாகம் நடத்தப்படுகிறதோ அவ்வாறே கணவன் இறந்ததும் பெண்ணுக்கும் மறுவிவாகம் செய்யப்படுகிறது. அந்த சமூகத்தில் எதிர்ப்பில்லை இது வழக்கம். விதவைக்கு விவாகமா என்ற சர்ச்சைகூட கிளப்பப்படுவதில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட அநேகரிடையே விதவா விவாகம் இன்பமாக நடத்தப்படுகிறது. இந்த சம்பவங்களை, விதவா விவாகம் கடவுளின் கட்டளைக்கு விரோதமானகாரியம் என்று நம்பும் உயர் ஜாதியார்களெனச் சொல்லிக் கொள்வோரு மறிவர்.

உண்மையில் இது கடவுளின் கட்டளையாயின், அவரது விருப்பமாயின், அழிக்கமுடியாத தலையெழுத்தாயின், மாதர் மறுமணத்தைக் கைக்கொண்டுவரும் சமூகம் நாசமாகவன்றோ போயிருக்க வேண்டும்? இல்லை, சமூகம் நசித்துப்போகவில்லை. கடவுளின் ஆக்ஞைக்கு மாறாக நடந்த பெரும் பாவத்திற்கு ஆளாகவில்லை. மணம் நடக்கிறது பிறரைப்போன்று அவர்களும் இன்பத்தை அனுபவிக்கிறார்கள். குழந்தைகளை ஈன்றெடுக்கிறார்கள்.

இது கடவுளின் ஆக்ஞையாயின், ஒரு சில சமூகங்கட்குமட்டும் இப் பழக்கத்தை அளித்து, ஒரு சில சமூகங்கள் இதைக் கொடிதெனக்கருதுமாறும் அருளியிருப்பாரா? கடவுள் பக்ஷபாதமற்றவர் என்று அதே வைதீகர்கள் கருதுகிறார்களே; கூறுகிறார்களே? விதவா விவாகம் நடத்துவது தவறு என்று வைதீகர்கள் கூறும்போது முதலில் அவர்கள், கடவுளின்பேரில், பக்ஷபாதமுள்ளவர் என்ற பெரும் பழியைச் சுமத்துகிறார்களென்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கணவன் இறந்ததும் ஒரு பெண் எல்லா சுகத்தையும் மறந்து,—வைதீகர்களால் சொல்லப்படும் அவ்வளவு கேவலங்கட்கும் உள்ளாகி, மூலையில் கிடக்கவேண்டுமென்பது கடவுளின் ஆக்ஞையாயின், இதுவரை நடத்தப்பட்டிருக்கும் விவாகங்களும் எப்படி நடந்தன? அதோடு மட்டுமல்ல, குழந்தைகளும் எப்படி, ஏன் பிறந்தன?

திருமணம் ஆற்றப்பெருமல், மூலையிலிருத்திக் காவல் புரிகிருர்களே அப்படிப்பட்ட சிலபெண்கள் நெறிதவறிவிடுகிருர்களே இதை அந்த 'ஈசன்' 'சிவனே' யென்று பார்த்துக் கொண்டிராமல் குழந்தையை உற்பத்தி செய்துவிடுகிருனே! இப்படி மறைவாக நெறி தவறுவதை விரும்பாமல் தானே என்னவோ பகிரங்கப்படுத்தி விடுகிருன் அந்த ஈசன்! வைதிகர்கள் யோசிக்கட்டும்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது சிறு வயதிலிருந்தே, நமக்கு இன்னல்கள் ஏற்படும் ஒவ்வொரு சமயங்களிலும், சொல்லப்பட்டு திருப்தியடைந்துகொள்ளும் வார்த்தை. அது உண்மையாயின் ஒரு விதவை, நகைகள் அணிவது, புஷ்பம் சூடிக்கொள்வது, திருமணமும் ஆற்றிக்கொள்வது, குழந்தையும் பிறப்பது, ஆகியன அவனுலேதானே நடக்கின்றன? அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா? விதவைப் பெண்களைச் சிலர் கடவுளின் கட்டளை யென்றெண்ணி, தங்களுள்ளத்தில் தோன்றும் விருப்பங்களை எல்லாம் பலவந்தமாகத் தடைப்படுத்திக் கொண்டு மூலையிலிருக்க எண்ணுகின்றனர்.

இல்லை; இல்லை; முக்காலும் இல்லை. விதவையாயிருக்கவேண்டுமென்பது கடவுளின் கட்டளையல்ல. விதவா விவாகம் கடவுள் சம்மதம்.

உண்மையில் கடவுள் விவாகத்தை விரும்பாதவராயின் ஆண்கட்கும் அந்தச் சட்டத்தை ஏற்படுத்தியிருப்பார். எனவே விதவா விவாகத்திற்குக் கடவுளைக் குறுக்கே திணிப்பது வீண் பேச்சாகும். விதவைச் சகோதரிகளே இத்தகைய முட்டுக் கட்டைகளை நம்பாதீர்கள். உண்மையான உங்கள் விருப்பத்தை நேரிய வழியில் பகிரங்கமாக நிறைவேற்றிக் கொள்ள சரியான வழியில் முயற்சியுங்கள்.

பல தாரமும், விவாக ரத்தும்

(ஸ்ரீமதி. கே. லக்ஷ்மி பாரதி எம். எல். ஏ.)

டிசம்பர் 5வ (சென்னை) அகில இந்திய ரேடியோவில் "பல தாரமும்விவாக ரத்தும்' என்பது பற்றி ஸ்ரீமதி கே. லட்சுமி பாரதி எம். எல். ஏ. செய்த பிரசங்கம்:

மக்கள் வாழ்க்கையில் விவாஹம் என்பது வெகு முக்கியமானதொரு சம்பவமாகும். இரு வேறு திறத்த ஆணையும், பெண்ணையும் அன்புக் கயிற்றால் ஒருவாறு பிணைத்து, வாழ்க்கைச் சரிதையில் பல மாறுதல்களை உண்டாக்கும் பெரிய சம்பவம் விவாகமாகும். இல்லற தர்மத்தை இனிது நடத்த வழிகாட்டும் கருவியாகும் விவாகம். எனவே ,விவாகமும் அதையொட்டி யெழும் பல பிரச்னைகளும் மனித சமுதாயத்தின் மூலாதாரமான பிரச்னைகளைச் சார்ந்தவைகளாகும். எனில், ஈண்டு இரண்டு முக்கிய விஷயங்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிடக் கூடும்.

பல்வேறு மதங்களும் பற்பல ஜாதிகளும் கொண்ட நமது பரந்த பாதகண்டத்தில், இவ்விஷயத்தைப் பொதுப்படப் பேசுவதில் பல சிரமங்கள் உள. எனவே, இப்பிரசங்கத்தின் அம்சங்களைச் சிறப்பாக ஹிந்துமதத்திற்கு மட்டுமென நான் குறுக்கிக் கொள்கிறேன். இன்னும் பல நாகரிகங்களும், கலைகளும் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டும், நமது பழக்க வழக்கங்களை நன்கு அறிந்து கொள்ளாத அந்நியநாட்டு ஜட்ஜிகளின் தீர்ப்புகளாலும் நிலைமை இன்னும் அதிகமாகக் குழம்பி யிருக்கிறது.

சமீப காலத்தில் நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சியோடு சமூக விழிப்பும் ஏற்பட்டிருக்கிறது. பெண் குலமும் அதிவேகமாகச் செல்லும் முன்னேற்ற இயக்கங்களில் பங்கெடுத்து தொண்டாற்றி வருகிறது. அடிமையாக்க முயலும் மனப்பான்மையை ஒவ்வொரு துறையிலிருந்தும் நீக்கும் முயற்சி பலமாக நடந்து வருகிறது. ஆணுக்குப் பெண் அடிமையில்லை என்ற உண்மை பறைசாற்றப்பட்டு வருகிறது. அறிவுகொண்ட மனித உயிர்களை அடி

மையாக்க முயல்பவர் பித்தராம் என்ற உண்மையை முரசு கொட்டுகிறது.

ஆனால், இவ்வுயர்ச்சி தாழ்ச்சி மனப்பான்மை எக்காலத்தில் இருந்து வந்தது என்றோ, அல்லது எல்லோரிடத்திலு மிருக்கிறது என்றோ நான் சொல்லவில்லை. இஃது இடைக்காலத்தில் புகுந்ததொரு தொல்லையே! சிறப்பாக நமது தமிழ் நாட்டில், ஆணும் பெண்ணும் நிகர் எனவே வாழ்ந்து வந்தனர்.

"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்
சதுர்மறைப்படி மாந்தர் இருந்த நாள்
தன்னிலே, பொது வான வழக்கமாம்!
மதுரத் தேமொழி மங்கைய ருண்மைதேர்
மாதவப் பெரி யோருடன் ஒப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்!"

என தேசிய் கவி சுப்ரமணிய பாரதியார் பாடி உள்ளாரன்றோ?

நமது புராணங்களை எடுத்துக் கொள்ளுங்கள். மாதர் தம்மை யாரும் இழிவு செய்ததாகச் சரிதை நாம் படித்ததில்லை. ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்ந்ததாகவே படிக்கின்றோம். புகழ் பெற்ற ஸ்ரீ ராமபிரான் சரிதையை எவ்வளவு அன்போடும், ஆதரவோடும் சரிநிகர் சமானமாக நடத்தியதாக அறிகின்றோம். அன்பிற்கு முண்டோ, அடிமை யாக்கும் மனப்பான்மை! சீதையும் அந்த அன்புவெள்ளத்தை ஸ்ரீராமன் மேல் எவ்வளவு அற்புதமாகச் செலுத்துகிறாள். இவர்கள் இருவர் அன்பில் யாரது அதிகம் என்று யாரே சொல்லவல்லார்? இராமர் காடேகும் போது சீதையிடம் விடை வாங்கும் சித்திரத்தைப் பாருங்கள்: "நீ என்னுடன் வரவேண்டாம்! காடு சுடும்!" என்கிறார் ராமர். "நின் பிரிவு எனும் தீயை விடக் காடு சுடுமோ?" என வினவுகிறாள் சீதை. இந்தப் பதிலின் அன்புத் தீ, இடங் கொண்ட ராமரையும் சுட்டுப் பணியச் செய்கிறது. என்னே அன்பின் வலிமை! பாட்டும் சுருதியும் கலந்தது போல், உள்ளம் ஒன்றுபடுவதில் ஆச்சர்ய

மில்லை. உயர்ச்சி-தாழ்ச்சி மனப்பான்மைகள் இல்லாத இடங்களில் இத்தகைய சம்பவங்கள் இயற்கையே யன்றோ?

இன்னும், பெண்மையையே பல உன்னத லக்ஷியங்களுக்கு உறைவிடமாகக் கொண்டாடுவது நம்மவர் மரபு.

செல்வத்திற்கு உறைவிடம் லக்ஷ்மி. கலைக்கு உறைவிடம் சரஸ்வதி. 'கனியும் கிழங்கும் தானியங்களும் வழங்கும்' பூமியை பூமாதேவி என்றழைக்கின்றோம். அவளைப் பொறுமைக்கு உறை விடம் என்கின்றோம். இன்னும் வீர லக்ஷ்மி, தைரிய லக்ஷ்மி என்று பராக்ரமத்தைக் கூடப் பெண்மையால், பாராட்டுகிறோம். அது மட்டுமா? ஹிந்துமதக் கடவுள்களைப் பாருங்கள்! சிவன், பார்வதியை உடம்பிலே பாதியாகத் தரித்துக் கொண்டார். விஷ்ணு லக்ஷ்மியை மார்பின் பேரில் இருத்தினார். பிரம்மா சரஸ் வதியை நாக்கின் பேரில் தாங்கினார். இவை எதைக் குறிப்பிடுகின் றன? ஆண், பெண் என்பன ஒரே சக்தியின் இரண்டு அம்சங் கள். இவை இரண்டும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும். அப் பொழுது தான் வாழ்க்கை சம்பூர்ணத்வத்தை அடையும்; இரண்டு கண்களும் பார்ப்பது போல ஒரு கண் ஒரு வஸ்துவைப் பார்க்க லாம். ஆனால் பார்வை சம்பூர்ணமாகாது. இரண்டு கண்களும் ஒருங்கே பார்த்தால் தான் பார்வையின் நோக்கம் சம்பூரணமா கும். இந்த உண்மையான தத்துவம் தான் ஈஸ்வரன் ஈஸ்வரி யைப் பாகத்தில் அமர்த்திக்கொண்டதில் அடங்கிருக்கிறது!

இனி ஒரு ஆடவன் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை விவாகம் செய்துகொள்ளலாமா? இதற்கு சாஸ்திர ஆதாரமுண்டா? ஆதாரமிருப்பினும், அப்படிச் செய்வது முறை யாகுமா, ஒழுங்காகுமா, தர்மமாகுமா, அறிவாகுமா?—இக் கேள்வி களை ஆராய்வோம்.

ஹிந்துமதம் சம்பந்தப்பட்டவரையில் இப்பொழுதுள்ள நடை முறையில் பொதுவாக ஒருவன் விவாகம் செய்துகொள்ளும் மனை விகள் எண்ணிக்கையில் எவ்விதமான தடையுமில்லை. ஆனால் இந்த அனுஷ்டானத்திற்கு சாதகமாக—அதாவது ஒருவன் எத்தனை மனை விகள் வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம் என்பதாக தர்ம

3

சாஸ்திரங்களில் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அதற்கு மாருக, துருவிப்படித்தால் இரண்டாவது தாரம் விலக்கப் பட்டிருப்பதாகவே தெரிகிறது. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் மட்டும் இரண்டாவது மணம் செய்துகொள்ளலாம், என்று மனு வியக்தமாகச் சொல்வதின் பொருள், மற்ற சந்தர்ப்பங்களில் இரண் டாவது தாரம் கூடாது என்பதுதானே?

"மனைவி மலடியாயிருந்தால் எட்டாவது வருஷத்திலும், குழந் தைகள் எல்லாம் இறந்துபோனால் 10-வது வருஷத்திலும், பெண் குழந்தைமட்டும் பெற்ருல் 11 வருஷத்திலும், வேறு மனைவி அடை யலாம்" என்றும், "பர்த்தாவுக்கு அன்பாகவும் உண்மையாகவும் நோய் வாய்ப்பட்ட மனைவி யிருக்கும்போது சம்மதம் பெருமல் விவாகம் செய்துகொள்ளக்கூடாது" என்றும் உள்ள மனு வாக்கி யங்கள் 2-ம் தாரத்தை தெளிவாக விலக்குகின்றனவல்லவா?

இரண்டாவதாக, புராணங்களைப் பார்ப்போம். நாம் பெரிதும் போற்றும் இராமாயணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஸ்ரீ ராமரை உத்தம புருஷராக நாம் புகழும் பல அம்சங்களில் ஒன்று அவரது ஏகபத்னி விரதமல்லவா! ஏகபத்னி விரதத்தின் உண்மை அம்சத்தை கம்பர் எவ்வளவு அற்புதமாகச் சித்திரிக்கிருர் பாருங்கள்! அசோக வனத்தில், சீதை: அனுமாரிடம் ராமருக்கு அடையாளம்சொல்லி அனுப்பும் கட்டம். சொல்லுகிருள் சீதை, "ஹனும, ராமர் ஒருநாள் மாலை தனிச் சல்லாபத்தில் அந்தரங்கமாக எனக்களித்த வாக்கு ஒன்று உண்டு. அது, இந்த ஜன்மத்தில் பிற மாதரைச் சிந்தை யாலும் தொடேன், என்பதாகும். இதை அவருக்கு ஞாபகமூட்டு வாய்". சிந்தையாலும் தொடேன் என்ற வார்த் தைகள் எவ்வளவு அர்த்தபுஷ்டி யானவை! எண்ணத்திலும் ஏகபத் தினி விரதம்—செய்கையில்மட்டும் போதாது. மகாத்மாஜி பிரம் மச்சர்யத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது எண்ணத்தில் பிரம்மச்சரி யமே, சரியான பிரம்மச்சரியமென்று குறிப்பிடுவது, ஏகபத்னி விரத தர்ம லட்சியத்தைக் கம்பன் கையாளுவதில் தொனிக்கிற தல் லவா?

நடைமுறைப் பழக்கத்தைப் பார்ப்போம். ஆரியரல்லாத பல ஜாதியாரிடம் இப்பொழுதும் ஒரு தாரமிருக்க மறுதாரம் மணப்

பது அனுமதிக்கப்படுவதில்லை. ஒரிஸாவில் 'காந்த' ஜாதியாரிடம் ஒரு மனைவி பர்த்தாவுக்கு உண்மையாக நடந்து வரும்வரை இரண்டாவது மனைவியை மணக்கலாகாது. அபிமான ஸ்திரீகூட வைத்துக்கொள்ளக்கூடாது. இன்னும் வடநகர ஜாதியாரிடமும் ஆமதாபாத்திலுள்ள பாடீதா ஜாதியாரிடமும் அப்படியே, இன்னும் கொழும்புக்குச் சென்று குடியேறிய தமிழ் மக்களிடம் இவ்விதி அனுஷ்டிக்கப்பட்டதாகவே 'தேசவழமை' என்னும் நூலிலிருந்து தெரிகிறது. சில வருஷங்களுக்குமுன், பாண்டிச்சேரியில் செய்துள்ள தீர்ப்பிலும் முதல் மனைவி தீராத நோய்வாய்ப்பட்டிருந்தால், அல்லது ஆண்குழந்தை பெருதிருந்தால் மட்டும்தவிர முதல் மனைவி சம்மதம் பெறுமல் விவாகம் செய்துகொள்ளக்கூடாது என்று தீர்மானித்துள்ளார்கள்.

இன்னும் மனு சாஸ்திரத்தில் ஓரிடத்தில் இவ்வாறு முதல் மனைவிக்கு ஆற்றவேண்டிய ஈமக்கருமங்களை முடித்த பின்னரே அவன் மறு விவாகம் செய்து கொள்ளலாமென்று காணப்படுகிறது.

இனி நான்காவதாக ஒழுக்க முறையைக் கவனிப்போம். நியாயத்தைப் பார்ப்போம். முதல் மனைவியிருக்க மற்றொருத்தியை விரும்புவது என்? பெரும்பாலும் மனிதனின் மிருக உணர்ச்சியான இன்ப நுகர்ச்சியேயாகும். மனைவியை இல்லற தர்மத்தை நடத்த உற்ற வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளுதலே முறையேயன்றி கேவலம் இன்பமுதவும் ஒரு இயந்திரமாகமட்டும் கொள்வது, பெண்ணை எவ்வளவு இழிவாகக் கருதுவதாகும் என்பது சிந்திப்பார்க்கு நன்கு விளங்கும். இன்னும் மனித தர்மத்தைப் பார்ப்போம். இரண்டாவது மனைவியைக் கொள்ளுங்கால், முதலவள் மனம் என்ன துடி துடிக்கும் என்பதை யாரே அறிவார்? பெண்மை மனம் படும்பாடு தெரியாமல் அவள் உள்ளத்தை இப்படி வாட்டுவது எவ்வளவு மதியீனம்? 'தலைநோவும் சங்கடமும், தான் பட்டால் தெரியும்' என்பார்கள். பிறர்படும் நெஞ்சகத் துயரை உள்ளபடி அறியும் சக்தியை மட்டும் ஆண்டவன் மக்களுக்கு அளிப்பாராகில், உலகில் துன்பங்கள் எவ்வளவு குறையும்! பர்த்தா தன் காதலன்பை வேறிடஞ் செலுத்துங்கால், இல்லை அப்படி யிருக்கு

மோ என்று சந்தேகிக்கும் போதே பெண் மனம் படும் பாட்டை ஒரு கவி அற்புதமாகப் படமெடுத்திருப்பதைக் கேளுங்கள்:

காதலன் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறார். மனைவி மெதுவாகப் பின்புறம் வந்து கண்ணைப் பொத்துகிறாள். ஆர் அவள்? என்கிறான் பர்த்தா. அவ்வளவுதான் அவள் பெருமூச்செறிந்து மூர்ச்சையுற்றுக் கீழே சாய்கிறாள். ஏன் அவள் மூர்ச்சையாக வேண்டும்? 'ஆர்?' என்று பர்த்தா கேட்டாரே இதன் பொருளென்ன? தன்னைத் தவிர வேறொருத்தியும் கண்ணைப் பொத்தக் கூடும் என்றுதானே 'ஆர்?' என்று கேட்கிறார். எனவே தன்னைத் தவிர வேறு ஒரு பெண்ணும் இடம் பெற்றுவிட்டாளோ? என்ற சந்தேக நினைப்பே இவளை மூர்ச்சை அடித்து விடுகிறது. ஆஹா! கம்பன் பெண் மனதை எவ்வளவு கண்ணாடிபோல் அறிந்திருக்கிறார்.

பாரதியாரின் கண்ணம்மா, காதலன் கண்ணைப் பொத்துகிறாள். "வாங்கி விடடீ கையை, யேடி கண்ணம்மா! மாயமெவரிடத்தில்?" என்கிறான் பர்த்தா. "கடலிலும், வானிலும், காரிலும் நீரிலும் என்ன கண்டீர்கள்? சர்வ சதா கண் பிறழாமல் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே" என்கிறாள் கண்ணம்மா. "அடி பைத்தியமே என்ன கேள்வி? என்ன காண்பேன்? அங்கும் எங்கும் இங்கும் ஒளி பொங்கும் நின் திருமுகமே கண்டேன்" என்கிறார். ஆஹா, அன்பு எத்தகைய உச்சநிலை அடைகிறது? உலகிலுள்ள சதிபதிகளனைவரும் இவ்வுயர் நிலையடைதற்கன்றோ, கம்பரும் பாரதியாரும் இத்தகைய லக்ஷிய தம்பதிகளை சிருஷ்டித்துள்ளார்கள்? இவ்வுயர் நிலையை விட்டு பல மனைவியர் நிலையடைவது கனி இருக்கக் காய் கவர்ந்த தொப்பாருமன்றோ?

எனவே, சாஸ்திரம், புராணம், சில குல ஆசாரம், ஒழுங்கு முறை அறிவுத் துறையராதிய எல்லாப்படியாலும், ஹிந்து சமூகத்தில் பலதாரத்திற்கு ஆதரவில்லை. அது நிறுத்தப்பட வேண்டும். இந்த நல்ல நோக்கத்தோடு மத்திய சட்டசபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா நாமெல்லோரும் ஆதரிக்க வேண்டியதாகும்.

இம்மசோதா கொண்டுவரப்பட்டதி லிருந்தோ, அல்லது இப்பிரசங்கத்திலிருந்தோ ஹிந்து மதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட

தாரங்கள் கொண்டவர்கள் மலிந்திருப்பதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். ஹிந்து மதம் ஒன்றும் அப்படித் தவறுகி விடவில்லை. இரண்டு மனைவியர் குடும்பங்கள் அபூர்வமே. ஆனுல் நாம் சும்மா இருந்தால் அதிகமாகக் கூடும்.

எனவே மேற்படி மசோதா அவசியமே. ஆனுல், சட்டம் மட்டும் நிறைவேறினுல் போதாது. பொதுஜன அபிப்பிராயம் இன்னும் அதிகமாக உருவகப்பட வேண்டும். பொதுவாக ஒழுக்கமுறை மேம்படுவதற்கான முயற்சிகள் செய்யப்பட வேண்டும். சட்ட பூர்வமாக இரண்டாவது விவாகம் தடுக்கப்படும் போது மணமற்ற முறைகளில் திரும்பாதிருக்க வழிகோல வேண்டும். இவை யாவும் பொதுஜன அபிப்ராயத்தினுல் மட்டுமே சாதித்துக் கொள்ள முடியும்?

இனி விவாக ரத்து என்பது மேலே கூறப்பட்ட விஷயத்தோடு ஒருவாறு கலந்ததுதான். விவாகமானபின், சரியாகவோ, தவருகவோ, இருவருக்குள்ளும் மனமொவ்வாது வேற்றுமை ஏற்பட்டால் தற்போதுள்ள நிலைமையில், இருவருக்கும் தர்ம் சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. மகமதியர்கள் விவாகத்தை ரத்து செய்துகொள்ளலாம். கிறிஸ்தவர்களு மப்படியே. ஹிந்துக்களிடையும், சில ஜாதியார் கலியாணத்தைத் தீர்த்துக்கொள்கிருர்கள். அப்படி தீர்த்துக்கொண்ட புருஷன் பெண்ஜாதி, வேறு பெண்சாதி புருஷனை மணந்துகொள்ளலாம். ஆனுல் மேல்ஜாதி என்று சொல்லப்படுகிற ஹிந்துக்களிடம் இது இல்லாதிருக்கிறது. இதை சாத்திய மாக்குவதற்காக ஹிந்துப் பெண்கள் விவாக ரத்து உரிமை மசோதா ஒன்று மத்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அடியில்கண்ட சந்தர்ப்பங்களில் மனைவி விவாகத்தை ரத்து செய்துகொள்ளலாம் என்பது இம்மசோதாவின் ஷரத்துகள்.

1. புருஷன் கலியாணத்திற்குப்பின் ஆண்மையை இழத்தல் 2. புருஷன் மதம் மாறுதல். 3. முதல் கலியாணம் ஊர்ஜிதத்தில் இருக்கும்போது இன்னெரு மனைவியை மணத்தல். 4. மூன்று வருஷம் சேர்ந்தாற்போல் புருஷன் மனைவியை கவனியாதிருத்தல்.

இம்மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனால் இம்மசோதாவில் ஒரு பெரிய குறை இருக்கிறது. ரத்து செய்துகொள்ளும் மனைவியினால் பிறந்த ஆண் பெண் குழந்தைகளின் உரிமையைப் பற்றியும், மனைவியின் ஜீவனாம்ச உரிமையைப்பற்றியும் ஒன்றும் சொல்லப்படவில்லை. படிப்படியாகத்தான் அவ்விஷயங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று சொல்லும் வாதம் அவ்வளவு திருப்திகரமாயில்லை. இயற்றும் சட்டத்தை, வீண் இடைஞ்சல்களுக்கு இடமில்லாமல் முதலிலேயே திருந்தச் செய்துவிடுவது தான் நலம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இத்தகைய சட்டங்கள் வந்து விட்டால் பெண்களெல்லாம், ஏதோ தலைகால் தெரியாமல் நடப்பார்களென்றோ, தாறுமாறாக நடந்துவிடுவார்கள் என்றோ யாரும் அஞ்ச வேண்டியதில்லை. சமூகத்தில் உள்ள குறைகளை நீக்கி, மாதர் உலகம் முன்னேறுவதற்காகவே இத்தகைய முயற்சிகள் நல்ல நோக்கத்தோடு செய்யப்படுகின்றன. சந்தேகிப்பவர்களுக்கு கவி பாரதியார் ஆணிபோல் அறையும் வார்த்தைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

> "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
> நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
> திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
> செம்மை மாதர் திரும்புவதில்லையாம்"

இன்னும் திருவள்ளுவரும்,

> "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?—மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை"

என்றார்.

பெண்களை மதில் வாயிற் காப்போர் முதலானவர்கள் காக்கின்ற காவலால் ஒரு பயனுமில்லை. பெண்கள் தர்மத்தை நெகிழவிடாமல், தங்கள் கற்பைத் தாங்களே ஒழுக்க முறை அறிவினால் காக்கின்ற காவலே காவலாகும் என்பது இக்குறளின் கருத்து. இக்குறளில் "மகளிர்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "மக்கள்" என்ற இரு பாலர்க்கும் பொருத்தமான வார்த்தையை உபயோ

கிப்பதும் சாலப் பொருந்தும்! நிறை என்பதை ஒழுக்கம் என்று கொள்ள வேண்டும்.

கற்புநிலை யென்று சொல்லவந்தார், இரு
கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்

என்றார் பாரதியார்;

இறுதியாக தமிழ்நாட்டுக் கவிஞர் பெண்கள் இயக்கத்தின் லக்ஷியத்தைப் பெண்கள் வாயிற் கொடுத்துக் கூறும் ஆச்சர்யமான அடிகளை மட்டும் கூறி என் பிரசங்கத்தை முடித்துக் கொள்கிறேன்:

"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவிலும் கை கொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச் செய்து வாழ்வோமடி!

வேளாள யுவர்களுக்கோர் வேண்டுகோள்

(எஸ். தங்கசாமி)

சகோதரி, சகோதரர்களே, நமது மரபினில், பால்மண மாருத, பச்சிழங்குழந்தைச் சிறுமிகளை மணம்செய்து கொடுக்கும் வழக்கத்தை,அறவே யொழிக்கவேண்டும். பால் மண மாருத, சிறுமிகளை, தாரமிழந்த அதிக வயதுடைய, வயோதிகருக்கு, மண முடிப்பது கொடிதன்றோ? நம் மரபினில், ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, பத்துவயதுச் சிறுமிகளை மணம்செய்து கொடுக்கிறார்கள். அதுவும் பணத்தாசையால்! பெண்ணுக்கு, விருத்தாப்பியரை மணப்பதற்கு சம்மதமில்லாவிடினும், சண்டாள தாய்தந்தைகள் வற்புறுத்தி பாழும் கிழவர்களுக்கே செய்யநினைக்கிறார்கள். தள்ளாத வயதாகவிருந்தாலும், பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளையாக

இல்லாதிருந்தாலும், பணமிருந்தால் போதுமெனநினைத்து மணம் செய்வது, கொடிதினும் கொடிதன்றோ?

தக்க பருவமில்லாத சிறுமிகளை, மணம்செய்து கொடுப்பதே பெரும் தவறன்றோ? அதிலும், பெண் சம்மத மன்னியில் சிறிதும், ஆண் தன்மை யில்லாதவருக்கு மணம் செய்வது மிக மிக வருந்தத் தக்கதே. பெண்சம்மதமின்றி, பருவம் தவறியவர்கட்கு மணம் செய்தால், பின்பு இருவருக்கும் ஒற்றுமைக் குறைவால் எவ்வளவு கஷ்டங்களேற்படுகின்றன?

அந்தோபரிதாபம்! சிறுவயதில் கணவரை இழந்துவிடில் அப் பெண் உடன் மறுமணம் செய்தால், நமது குலம் ஈனமாகி விடுகிறது! பாபம் வந்துவிடும்!! ஆண்கள்மட்டும் முன்தார மிருக்க எத்தனை பெண்களை வேண்டுமானாலும், செய்துகொள்ளலாம். அதற்குமட்டும் பாபம் வராது; கடவுள் கோபித்துக்கொள்ள மாட்டார்!

கணவரை யிழந்த திக்கற்ற சிறுமிகளை மணம்செய்து கொடுக்கப்படாதெனவும், தலைவிதியெனவும், சொல்லி மூலையிலிருக்கச் செய்வது சொல்லுக்கடங்காத பரிதாபமன்றோ? வேளாளர் மரபினில் உதித்த வீரமும் அன்பும் நிறைந்த இளைஞர்காள், இனியும் உறங்காது நம் மரபினில் தோன்றும் பால்ய விதவைகளை, மறுமணம் செய்வதற்கு, அச்சமின்றி முன்வாருங்கள். ஆண்களுக்குள்ள விருப்பம், பெண்களுக்கும் இருக்குமன்றோ?

சகோதரிகளே, சகோதரர்களே! இதை ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். பால்ய விதவைகளை மறுமணம் செய்து கொடுக்காது, வைத்திருப்பதாலன்றோ ஒரு சில விதவைகள் தீயவழியில் விபசாரத்திலிறங்கத் துணிந்து விடுகின்றனர்?

எந்த சமுகத்தாரும், பால்ய விவாகத்தைத் தடை செய்வதுடன் விதவை மறுமணம் செய்ய வேண்டுவது மிக்க அவசியம்.

பால் மணம் மாருத பச்சிளங் குழந்தைகளுக்கு, மணம் செய்வித்து, விதவை எனும் நரகவேதனைக்கு உட்படுத்தும் சமூகக் கொடுமை வேருடன் பிடுங்கப்பட வேண்டும். நாட்டில் விதவை

கள் பெருகுவதற்கும் விபசாரம், கொலை, களவு நிகழ்வதற்கும் பால்ய விதவைகளின் காமமே மூலகாரணமாகும். பதியை யிழந்து பரதவிக்கும், பால்ய விதவைகளுக்கு மறு விவாகம் தவறல்லவென அழுத்திக்கூறலாம். இன்பம் அனுபவிக்க அழுது புலம்பிக் கதறி கண்ணீருதிர்க்கும் லட்சக்கணக்கான நம் மரபினிலிருக்கும் விதவைகளின் துயரத்தைப் போக்கவும் சீர்திருத்தக்காரர்கள் ஆண்மையுடன் தீவிரமாக உழைக்க வேண்டுவது அவசியம்.

பழைய பழக்க வழக்கமெனவும், தலைவிதியெனவும் பல்லவி பாடாது, பால்ய விவாகத்தைத் தடைசெய்து விதவா விவாகம் செய்ய வேண்டும். வேளாள மரபினி லுதித்த சகோதரி சகோதரிகளே வீரமுடன் எழுவீர்களாக.

ராணி சாந்த் பீபி.

நாடாண்ட வீரப்பெண்மணிகள் பலர் இந்திய சரித்திரத்தை அழகுறச் செய்துள்ளார்கள். இவருள் ராணி தாராபாயின் சரித்திரத்தைச் சென்ற இதழில் படித்தோம். பேரும் புகழும் பெற்ற மொகலாய சக்ரவர்த்தி அக்பரையும் எதிர்த்து முறியடிக்கச்செய்த முஸ்லிம் ராணி சாந்த் பீபியின் வீர சரித்திரத்தை இவ்விதழில் தருகின்றோம். இற்றைக்கு முன்னூற்று நாற்பத்து மூன்று வருஷங்கட்கு முன், ஜனவரி மாதம் இரண்டாந் தேதி, ஆகமத் நகரின் வெளிப்புறத்திலே, நடைபெற்ற போர், சாந்த் பீபிக்கு, என்றும் அழியாப் புகழைத் தந்தது. அன்றைய தினம் அப்பெண்மணி காட்டிய வீரமும், தீரமும் பெண்ணுலகுக்கே மங்காத பெருமை தந்தனவன்றோ?

★

மொகலாய மன்னர் அக்பர் ஆண்ட காலம். ஹிந்துஸ்தானம் முழுமையும் அவரது படைகள் பரந்து சென்று, நாட்டைப் பெருக்கின. எஞ்சி நின்றது தெக்கணம் மட்டுமே. தென்னாடு மட்டும் விலக்கா? மன்னனின் மைந்தன் மூராட் பெரும் படையுடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டான். ஆனால், ஆமத் நகருக்கு

அப்பால் செல்ல முடியவில்லை. பலம் பொருந்திய அந்த ராஜ்யம் அவனது வெற்றி விஜயத்துக்குக் குறுக்கே நின்று தடுத்தது. ஆமத்நகர் வீரத்துக்குப் பேர்போனது. அந்நாட்டுப் பெண் மணிகளும் போர்த்திறமைக்குப் பேர்போனவர்கள். அந்நாட்டு ராணிகளே, படைகளுக்குத் தலைமைவகித்துப் போர்க்களம் புகுந்து வெற்றிக்கொடி நாட்டியவர்களல்லவா? ஆகவே, மொகலாயப் படைகளை ஆமத் நகரம் எதிர்த்துத் தடுத்தது ஆச்சரியப்படத்தக்க ஒன்றல்ல.

★

ஆமத் நகர அரசவம்சத்தில் மூன்றாவது மன்னன் ஹுஸேன் நைஸாம் ஷா. அவனது புத்திரி சாந்த் பீபி. பீஜப்பூர் மன்னன் ஆலி—ஆடி—ஷாவுக்கு மணமுடிக்கப்பட்டாள். அவளுக்கு இரு பத்தைந்து வயதாயிருக்கும்போது, பீஜப்பூர் மன்னன் ஒரு அடிமையால் படுகொலை செய்யப்பட்டான்.

★

ஆமத் நகர ராஜவம்சத்தில் எட்டாவது மன்னன் இப்ராஹீம் நைஸாம் ஷா. நாலு மாத அரசாட்சியில் அவன் கொலையுண்டான். இளவரசன் பஹதூர் பட்டத்துக்கு வந்தான். வயது மூன்றேயாத லால், பாட்டி சாந்த் பீபி ரீஜண்டாகச் செங்கோலைக் கைக்கொண் டாள். பகதூரின் வார்சுரிமைக்கு இன்னொரு இளவரசன் பாத் தியம் கொண்டாடினான். இதனிமித்தம் இரு கட்சிகள் தோன் றின. மீயான் மூஞ்சி—காலஞ்சென்ற மன்னனின் மந்திரி, இரண் டாவது இளவரசனது பாத்தியதையை ஆதரித்தான். அத்துட னில்லாது அக்பரின் உதவியையும் நாடினான். தெக்கணத்தின் மீது கண்ணோட்டம் செலுத்திய மொகலாய மன்னன், இச்சந்தர்ப்பம் தனக்கொரு பாக்கியமெனக்கொண்டு பொருக்கெழுந்தான். மூராட் முப்பதாயிரம் பலம் கொண்ட சேனையுடன் ஆமத் நகரைச் சூழ்ந்து முற்றுகையிட நேர்ந்ததற்குக் காரணம் இதுதான்.

★

1595ம் வருஷம் டிசம்பர் மாதம் 21ந் தேதி கோட்டைக்கு வெளியே மொகலாயப் படை கூடாரமடித்திருந்தது. கோட்டை

கொத்தளங்களைப் பார்வையிட இளவரசன் மூராட் தனியாகச் சென்றான். அவனது வீரர்கள் அனைவரும் கடுந் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில், எதிர்பாராதவிதமாக, சாந்த் பீபியின் படைகள், மொகலாய வீரர்கள்மேல் பாய்ந்து துவம்சம் செய்தன. தூங்கினவர் எழுந்து என்ன சந்தடி யென்று கவனிப்பதற்குள் படுத்த படுக்கையிலேயே இருதுண்டாக விழுந்தனர். எழுந்து ஓடிச்சென்றால், தப்பும் வழி அடைபட்டிருந்தது. இவ்வாறாக, அன்று, ஒரு பெண்மணியின் தந்திரத்தின் முன்பு, வீரம் பொருந்திய மொகலாய மன்னனது படை தலை கவிழ்ந்து நிற்க நேர்ந்தது.

★

அடுத்த தடவை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென மொகலாயர்கள் நிச்சயித்துக்கொண்டனர். கோட்டையை நேரடியாகத் தாக்கி விடுவது என்று முடிவுசெய்தனர். கோட்டைக்கு வெளியே நிற்பவர், வீரத்தில், உள்ளே யிருப்பவர்களை விடக் குறைந்தவர்கள்தான். ஆதலால், போர்புரியாமல், கோட்டைச் சுவர்களை வெடிமருந்து வைத்துக் கொளுத்தி விடுவதே, வெற்றிக்கு சுலபமான வழியென நினைத்து, சுவர்களின் அடியிலே குழிகள்தோண்டி, அவற்றில் வெடிமருந்தை வைத்து, கல்லாலும், மண்ணாலும் மூடினர். நெருப்பால் தொடவேண்டியதுதான்; அடுத்த நிமிஷம் கோட்டைச்சுவர்கள் சுக்கு சுக்கலாக இருந்த விடந்தெரியாமல் பறந்துபோகும்! ஒரு பெண்ணுடைய தந்திரத்தை விட நம்முடைய தந்திரம் என்ன குறைந்ததா?—என்று வீரம் பேசிக்கொண்டனர் மொகலாய வீரர்கள். ஆனால் அவர்கள் மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பம் இன்னும் எட்டிவிடவில்லை. எதிரிகளின் தந்திர வித்தையை ராணி அறிந்தாள். அடுத்த நிமிஷம், கோட்டைக்குள்ளே சுறுசுறுப்பாக வேலை நடந்தது. சுவர்களினடிப்பாகத்தில் மண் பறிக்கப்பட்டு, வெடிமருந்துக் குழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. மருந்தைத் தந்திரமாக அகற்றிவிட்டு, அவற்றில் மண்ணும் கல்லும் வைத்து முன்போல மூடினார்கள். எல்லாக்குழிகளும்இவ்வாறு காலிசெய்யப்பட்டன. ஆனால் ஒன்றுமட்டும் முன்போலிருந்தது. அடுத்தநாள் வெள்ளிக்கிழமை; ஆதலால் அன்று நெருப்பு

வைக்காமல், மறுதினம் வைக்கலாமென மொகலாயர் படைத் தலைவன் கருதினான். இதனால், உள்ளே யிருப்பவர்களுக்கு அதிகச் சாதகமேற்பட்டது.

★

இளவரசன் மூராடுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. சாந்த் பீபி இனி அவன் கைக்குள் அகப்பட்டு விடுவாள்! அவளோடு தெக்கணமும் அவன் ஆட்சிக்குள்ளே வந்துவிடு மல்லவா? எல்லாம் ஒரு தீக்குச்சியின் வேலையில் முடிந்துவிடும்! ஆனால் அவனது மகிழ்ச்சி அதிகநேரம் நீடித்திருக்க வில்லை. அதற்குப் பதில் ஆச்சரியமும், திகிலும், கோபமும், தோல்வியுமே ஏற்பட்டன. ஏன்? நெருப்புக் குச்சி ஒன்றல்ல பத்து வைத்தபோதிலும், எதுவும் வெடிக்க வில்லை. கோட்டை இருந்தபடியே இருந்தது. போர்த்தலைவர்கள் திகைப்புற்றனர். மருந்து வெடிக்காம லிருப்பானேன்? ஒவ்வொரு குழியாகப் பறித்துப் பார்த்தார்கள். ஒன்றிலாவது மருந்து இருக்க வேண்டுமே? உள்ளேயிருப்போர், கடைசிக் குழியில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் படாரென்று வெடித்தது அந்தக்குழி! சுவர்கள் ஆடின. அந்த இடத்தில் ஒரு பெரிய துவாரம் உண்டாயிற்று. ராணியின் சேனைகள் கலக்க முற்றன. தைரிய மிழந்தனர். அந்தக்குழியிலே, அவர்களில் நூற்றுக்கணக்கானவர் அன்று வீழ்ந்தனர். மற்றவர்கள் பின் வாங்க யத்தனிக்கும் போது, ராணுவ உடைதரித்து, உருவிய வாளுடன் அங்கு தோன்றினாள் சாந்த் பீபி. படைவீரர்கள் தைரியங் கொண்டனர். நின்ற இடத்திலிருந்து சிறிதும் அசைய வில்லை. யுத்த தேவதையே பழிவாங்கும் நோக்கத்துடன் வீராவேசங் கொண்டு எழுந்து வந்தது போல் தோன்றியது. யுத்தம் சிறிது நேரந்தான் நடந்தது. ஆனால் இரத்தம் ஆறாக ஓடியது. இருபக்கத்திலும் உயிரிழந்தவர் கணக்கிலர்.

★

ராணி அந்த இடத்துக்குப் போருடை தரித்துவந்ததைக்கண்ட யானை வீரர்கள் பலர் ஓடோடியும் தங்கள் யானைகளைச் செலுத்தி ராணியைப் பாதுகாக்க வந்தனராம். ஆனால், அவர் யானைகளை அப்புறப் படுத்திவிட்டு, எதிரிகளின் முன்னணியை நோக்கிச்

சென்றாராம். தன் வீரர்களை நோக்கி ராணி அடியில்வருமாறுகூறி னூர்: "ஒருவர் தானே தற்கொலை செய்துகொள்வது அறிஞர்களா லும், தெய்விகச் சட்டத்தாலும் தடுக்கப்பட்டிருந்தபோதிலும் நான் இன்று என்னுடன் விஷங் கொண்டுவந்திருக்கிறேன். இன் றையதினம், எதிரிகள் நமது கோட்டையைக் கைப்பற்றினல், விஷத்தைக் குடித்து உயிரை மாய்த்துக் கொள்வேன்". மாலையும் வந்தது. மொகலாயப்படை, அந்த இடத்தைவிட்டுப் பின்வாங்கிச் சென்றது. அவர்கள் வீரர்களில் நேர் பகுதிப்பேர் அன்றைய கடும்போரில் உயிர் துறந்தனர். சாந்த் பீபி, இடிந்த இடத்தில் நின்று, பழுது பார்க்கும் வேலைகளை நேராகக் கவனித்தார். அன் றையப் போரில், அசாதாரண வீரங்காட்டிய அத்தனைபேருக்கும் வெகுமதிகள் வழங்கப்பட்டன.

★

அன்றையப்போரின் முடிவு, மொகலாய இளவரசனது மனத் தையே மாற்றிவிட்டது. இனி தெக்கணம் கைப்பற்றும் ஆசையை விட்டொழிக்க வேண்டியதுதான் என்ற எண்ணம் மனத்தில் தோன்றியது. வெற்றிபெற்ற கட்சிக்கும் நஷ்டம் கொஞ்சமல்ல. ராணி பீஜப்பூரின் உதவியை நாடினூர். மொகலாய வீரர்கள் இதை அறிந்தனர். நீண்டகாலமாக இந்தப் பயனற்ற முற்றுகையைத் தொடர்ந்து கொண்டிருப்பது அவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. எனவே, ராணி அனுப்பிய கடிதத்தில் தாங்களாக ஒரு வரியைச் சேர்த்து எழுதினர்; "இந்தப் போரை நிறுத்திவிட உங் கள் (பீஜப்பூர்) வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று. இவ்விஷயத்தை அறிந்த மூராட், பயங்கொண்டு தனது படையுடன் திரும்பிச் சென்றான். இவ்வாறாக ராணி சாந்த் பீபி யின் வீரத்துக்கு முன்னே பலங்கொண்ட மொகலாய வீரரும் புறமுதுகு காட்டி ஓடினர்.

★

எந்தக் காலத்திலும், எந்த தேசத்திலும் துரோகிகள் இருந்து வருகின்றனர். ராணி சாந்த் பீபியும் ஒரு சமயம், துரோகிகளின் சூழ்ச்சிக்கு ஆளாக நேர்ந்தது. இளவரசன் மூராட் இறந்ததும், அக்பர் தாமே நேரில் ஆமத் நகரை ஒருகை பார்ப்பது என்று

படையுடன் புறப்பட்டார். இது நிகழ்ந்தது 1599ல். ஆனால் இந்த இருபோர்களுக் கிடையிலும், காலச்சக்கரத்தின் வேகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. சாந்த் பீபியின் ராஜ்யத்திலே பல தகராறுகள் முளைத்தன. நாடு சின்னபின்னப்பட்டது. யார்மீதும் ராணி நம்பிக்கை வைக்க முடியவில்லை. எனவே அவர், எதிர்த்துப் போர்செய்ய மனமில்லாது, சமரசம் பேசமுயன்றார். ராணுவத்தலை வர்களில் ஒருவன் ஹமீத்கான் என்பவன். அவன் என்ன கார ணத்தாலோ போர்புரிதலே நன்று என்று யோசனை கூறினான். ஆனால், அவனது யோசனை பயன்படாமற்போகவே, ராணி மொக லாயர்களுடன் சேர்ந்து, கோட்டையை எதிரிகள் வசம் ஒப்புவிக் கச் சூழ்ச்சி செய்துவிட்டதாக எங்கும் சொல்லிவிட்டான். கோபங் கொண்ட ஜனங்கள், உண்மையை உணராது, ஹமீத்கான் தலைமை யில் அரண்மனையினுள் புகுந்து ராணியைப் படுகொலை செய்து விட்டனர். இன்றளவும் ராணி சாந்த் பீபியின் புகழைத் தெருப் பாடகர்கள் பாடுவதைக் கேட்கலாம்.

கர்ப்பமுற்ற தாய்.

(டாக்டர் L. R. பெர்னாண்டஸ், திருச்சி)

சமீபத்தில் கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி, இந்தியா வில் வருஷந்தோறும் ஒரு லட்சம் கர்ப்பிணிகள் இறப்பதாகத்தெரி யவருகிறது. இந்தியாவின் நன்மையைக் கோரும் எவருக்கும், இது மிகுந்த வருத்தத்தைத் தரும் என்பதி லையமில்லை. கர்ப்பிணிக ளிடையே ஏற்படும் மரணத்தைத் தடுக்கப் பல முக்கியமான சுக வழிகளைக் கையாள வேண்டியது அவசியமாகும். இங்கே குறிப் பிடுகிற யோசனைகளை கணவர்களும், பெற்றோரும், மாமிகளும் கவ னிப்பார்களெனக் கருதுகிறேன். கர்ப்பிணிகளுடைய சுற்றத்தார், பிரசவத்துக்கு முந்திய சில மாதங்களில் போதிய கவனஞ் செலுத்துவார்களானல், பல மரணங்களைத் தடுத்துவிடலாமென நான் நம்புகின்றேன்.

முதன்முதலில், கர்ப்பம் ஒரு நோயல்லவென்பதையும், இயற்கையாகப் பெண்களுக்கு ஏற்படக்கூடிய சரீர சம்பந்தமான நிலைமைதான் என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆரோக்கிய விதிகள் மீறப்படும்பொழுது, அது துக்ககரமாகிவிடுகிறது.

கர்ப்ப காலத்தில், வாயும், பிரத்தியேகமாகப் பற்களும் நன்கு கவனிக்கப்படவேண்டும். ஏனெனில், பற்கள்மீது அசிரத்தையாயிருப்பதாலேயே பல நோய்கள் ஏற்படுகின்றன. அஜீரணம், வாதம் முதலிய நோய்களெல்லாம் இதனுல் உண்டாகின்றன. தினம் ஒரு முறையேனும் பல் துலக்கிச் சுத்தஞ் செய்யவேண்டும்.

கர்ப்பவதியின் அவயவங்களில் அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டியது குடல்தான். நீண்டகால மலக்கட்டினுல், தலைவலி, பசியின்மை, வாந்தி முதலிய கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆகையால், தினமும் சரியானபடி மலம்வெளிப்பட்டு குடல் சுத்தமாகவேயிருக்கவேண்டிய தவசியம். பேதி போகவில்லையென்ருல், உடனே பேதி மருந்தைக் கொடுக்கக் கூடாது; அப்படிக் கொடுத்தால் கர்ப்பச்சிதைவு ஏற்பட்டுவிடக் கூடும். தினமும் ஏராளமாகப் பழவகைகள்—வாழைப்பழம், ஆரஞ்சுப் பழம், கொடி முந்திரி, மாம்பழம், புரூன்ஸ்—சாப்பிடவேண்டும். இவற்றுடன் கீரை வகைகள் கலந்த மரக்கறிகளையும் தாராளமாகச் சாப்பிடவேண்டும். இவை சிறு குடலை நன்கு கழுவி சுத்தஞ் செய்யும் தன்மை வாய்ந்தவை. படுக்கப்போகுமுன் ஒரு கோப்பை பசும்பால் சாப்பிட்டால், காலையில் பேதி சாதாரணமாகப் போகும்.

மூத்திரம் தாராளமாகப்போவது ஒரு முக்கியமான விஷயமாகும். ஐந்தாவது மாதத்திலிருந்து கர்ப்பிணியின் மூத்திரத்தைப் பரிசோதனைசெய்ய டாக்டரிடம் அடிக்கடி அனுப்பி வரவேண்டும். கோளாறு ஏதாவது இருந்தால், உடனே அதை நிவர்த்திசெய்துவிடலாம். உடனுக்குடன் மூத்திரக் கோளாறுகளைக் கவனித்தால் பல கர்ப்பிணிகளைக் காப்பாற்றியிருக்கக்கூடும். ஏனெனில் மூத்திரக் கோளாறினுல் விஷப்பொருள்கள் பல உடம்பைவிட்டு வெளியே செல்லாமல் தங்கிவிடுகின்றன. இதுகாரணமாக, 7, 8, 9,-வது

மாதங்களில் வலிப்பு ஏற்பட்டுவிடுவதுமுண்டு. ஆகவே, இம்முறையைக் கையாள்வதால், கர்ப்பிணி மரணங்களைக் குறைக்கமுடியும்.

இரவு நன்கு அயர்ந்து தூங்கவேண்டும். கவலையும், வியாகூலமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குறைந்த அளவு தினமும் ஏழு மணிநேரத் தூக்கமாவது வேண்டும். இதைவிடக் கூடுதலாகத் தூங்குவது நல்லதே. ஏனெனில் பிரசவத்திற்குப்பிறகு தாய்க்குப் போதுமான தூக்கமிருக்கமுடியாது. தூக்கம் வராவிட்டால், தோட்டத்தில் சிறிது உற்சாகமாக நடக்கவேண்டும். பல இரவுகளில் தொடர்ச்சியாக, சரியான தூக்கம் வராவிட்டால், தூக்கத்துக்கு மருந்து எதையும் கொடுத்துவிடாதீர்கள். வைத்தியரின் மருந்தைவிட, இடமாற்றமும், சுற்றுச்சார்புகளின் மாற்றமும் அதிக நன்மையைச் செய்யும். அவளைத் தாய்வீட்டுக்கு அனுப்பிவிட்டால் அது ஒரு மந்திரகவசத்தைப் போன்று வேலைசெய்யும். ஏழு அல்லது ஒன்பது மாதத்தில்தான் தாய்வீட்டுக்கு அனுப்புவது என்ற பழக்கத்தை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருக்க வேண்டாம்.

கர்ப்பகாலத்தில், சாதாரண வீட்டுவேலைகள்—சமையல் வீட்டு நிர்வாகம் போன்றவை-அவளுடைய ஆரோக்கியத்துக்குக் கெடுதலானவை யல்ல; ஆனால், நேர்மாறாக ஆரோக்கியத்துக்கு அவசியமானவைதான். இதனால் மனதுக்கு நல்ல, விருப்பமான வேலை கிடைக்கின்றது. வேலையில்லாத கர்ப்பிணிதான், தன் கர்ப்பத்தைப்பற்றி அனுவசியமாக வீண்பேச்சுப்பேசி, பிரசவகாலத்தில் ஏற்படக்கூடிய துன்பத்தையும், பயங்கரத்தையும் எண்ணியெண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பாள். ஆனால் ஐந்தாவது மாதத்துக்குமேல் கனமான வஸ்துக்களைத் தூக்கும் வேலையைச் செய்யக் கூடாது. கால் தவறிக் கீழேவிழாமல் எச்சரிக்கையுடன் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அப்படி விழும் அதிர்ச்சியினால், கர்ப்பம் பூரணமாவதற்குமுன் பிரசவ மேற்பட்டுவிடக்கூடும்.

கர்ப்பிணிக்கு எப்போதும் பிறருடைய அனுதாபமும், ஆதரவும் தேவை. அவள் எப்போதும் சந்துஷ்டியாக இருக்கும்படி செய்யுங்கள். நகைச்சுவைததும்பிய புத்தகங்களைப் படிக்கச் செய்யவோ அல்லது படித்துக் கேட்கச்செய்யவோ வேண்டும். (Health)

காதலின் தியாகம்

(டி. யஸ். மதுரம்)

காஷ்மீரத்திலே மனுஸ்பாய் ஏரி இயற்கை அழகு செறிந்தது. அதன் அக்கரைக்கு அடுத்தாற் போன்று வெகுதூரத்தில் சிறு தீவு ஒன்று இருக்கிறது. அதைச்சுற்றி அழகிய பூந்தோட்டம். நடு மத்தியில் ஒரு மண்டபம். நெருங்கி, உயர்ந்து, வளர்ந்த மரங்கள் அதைச்சுற்றிலும் அரண்போன்று அமைந்துள்ளன. ஒரு காலத்தில் இயற்கை வனப்புடன் விளங்கிய இத்தோட்டம் இன்று வெறுங் காடாக இருக்கின்றது. நீரோடைகளும், ஊற்றுக்களும் உலர்ந்து, இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. மிகச் சிறியதாகப் பார்ப்பாரற்றுக் கிடக்கும் இந்தச் சிறு தோட்டம் ஜெஹாங்கீர் காலத்துச் சின்னமாக இன்றும் விளங்குகின்றது. மிக ஒதுக்கமான இடத்திலிருப்பதால் அவ்விடத்துக்கு யாரும் செல்வதில்லை. எனினும், இந்த இடத்துக்கும் சரித்திர சம்பந்தமிருப்பதாகத் தெரிகிறது. காஷ்மீர பாஷையில் வரையப்பட்ட ஒரு பழய கையெழுத்துப் பிரதியில் எழுதியிருப்பதைப் படியுங்கள்:

காலம் ஒரு பெருஞ் சுமையாகத் தோன்றுகிறது. உயிர் இன்னும் போகாமல் தொங்கிக் கொண்டிருக்கிறது. மனதுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடனே இந்த எழுதுகிறேன். எனது வாழ்நாளில் பெரும் பகுதியைப்பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை; அதில் எனக்கு எவ்விதக் கவலையும் ஏற்படவில்லை; விசேஷ சம்பவம் எதுவும் நிகழவில்லை. என் காலத்து, பிரபுக்கள் குடும்பத்துதித்த வாலிபரைப் போன்றே நானும் காலங்கழித்தேன். சென்ற வருஷத்தைப்பற்றியும், அதில் நிகழ்ந்ததைப்பற்றியுமே இங்கு எழுதப்போகிறேன். போதிய பலம் இந்தக் கையிலிருந்தால், இந்தக் கட்டுரை முடிவுறும்.

ஆ! அவ்வளவு சந்தோஷகரமான பிற்பகலிலே, விதி என் தலைமீது அமர்ந்திருக்கின்றது என நான் எள்ளளவும் உணர்ந்தேனில்லை. எனது குதிரை மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

திடீரென ஒரு சப்தம். அந்த சப்தம் வந்த திக்கு நோக்கிக் குதிரையைச் செலுத்தினேன். நான் கண்டகாட்சி எனக்கு அளவற்ற ஆச்சரியத்தை அளித்தது. ஒரு அழகிய பழத்தோட்டம். இனிய கனிகளினூடே ஒரு இளங்கன்னி நின்று கொண்டிருந்தாள். பிராமணப் பெண்தான். நெல் குத்திக் கொண்டிருந்த அந்நங்கை அணிந்திருந்த வளையல்கள், செவிக்கினிய ஓசையை எழுப்பின.

ஒரே பார்வையில், என் மனதில் ஒரு பெரிய மாற்றம் நேர்ந்தது. என் இருதயம் பறிபோயிற்று. அவளுடைய அழகை இங்கு விவரிக்கப் புகவில்லை. விவரிக்கின் என் மனத்துன்பம் சகிக்க முடியாதபடி எல்லை மீறிவிடும்.

அவ்விளங் கன்னியை இமை கொட்டாது எத்தனை நேரம் நோக்கிக்கொண்டிருந்தேன் என்று அளவிட்டுச் சொல்ல முடியாது. திடீரென ஊர்த் தலைவன் அங்கு தோன்றினன். தாடி பறக்க, கண்களில் சுடர் பறக்க, கைகளை ஓங்கிக்கொண்டு அவன் என்னை நோக்கிக் கோபாவேசத்துடன் ஓடிவந்தான். ஒரு பிராமணப் பெண்ணை நான் எப்படிப் பார்க்கலாம் என்று கேட்டான். நான் அவளைப் பார்த்துவிட்டதால், அவள் அசுத்தமாகி விட்டதுமன்றி, கிராமத்துக்கே பெருத்த அவமானத்தை உண்டுபண்ணி விட்டதாகவும் அலறினன். அவன் சப்தம் கேட்டு,ஊராரெல்லோரும் ஒருங்கு திரண்டனர். அந்த இளம் பெண்—ஒரு அனாதை—என்ன நேரிடுமோவென்ற பயத்தால் நடுநடுங்கி, சோகத்துடன் மௌனியாக அங்கு நின்றாள்.

நீண்டநேரம் விவாதம் நடந்தது. சமூகத்துக்கு இன்னும் அவமானம் வராமல் பாதுகாக்கும் பொருட்டு, அந்தப்பெண்ணை சமூகப் பிரஷ்டம் செய்துவிடுவதென்று முடிவுகட்டினர். அவள் எவ்வித குற்றமு மிழைக்கவில்லை யென்றும், ஏதேனும் குற்றமிருந்தாலும் அது என்னையே சாருமென்றும், ஒரு விஷயமு மறியாத அப்பெண்மீது வீணுகப் பழிசுமத்த வேண்டாமென்றும் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் காதில் ஏறவில்லை. மதத்தின் கொடுமையை என்னென்று சொல்வது?

இந்த நிலையில் நான் என்ன செய்வது! மெல்லிய மலர் போன்று விளங்கிய அப்பெண்ணை என் குதிரைமீது தூக்கி வைத்துக்கொண்டு வீடுநோக்கித் திரும்பினேன்.

வீடு என்ற எண்ணம் வந்ததும், என் தைரியம் பறந்தது. எனது தந்தையும் ஒரு மதப் பித்தராயிற்றே. வேற்று மதத்தைச் சேர்ந்த இப்பெண்ணை அவர் ஒரு காபராகவல்லவா கருதுவார்? அவளை எப்படியும் மணந்து கொள்வதென்று முடிவு கட்டிவிட்டேன்; அதற்கு அவர் சம்மதமளிப்பாரா? ஒருபோதும் மாட்டாரே! காதலின் பாதை, கடக்க முடியாத கருங்கற் பாறையாக என் மனக்கண் முன்னே காட்சியளித்தது. எண்ணி யெண்ணி ஒருவழி கண்டுபிடித்தேன். வெகு தூரத்திலிருக்கும் இந்தத் தீவு மின்னொளி போன்று என் புத்தியில் பட்டது. இங்கு நான் பல முறை என் நண்பர்களுடன் வந்து உல்லாசமாகக் கழித்திருக்கின்றேன். எனவே, இந்த இடத்தை நோக்கிக் குதிரையைச் செலுத்தினேன்.

இதைத் தொடர்ந்த சில மாதங்கள் என் வாழ்க்கையிலே மிகவும் இன்பகரமாகக் கழிந்த காலமாகும். ஒரு பரந்த பாலைவனத்தின் நடுவேயுள்ள ஒரு சிறு பூஞ்சோலையைப் போன்று அவை எனது வரண்ட வாழ்க்கைச் சரிதத்தில் விளங்குகின்றன. இந்தக் குறுகிய காலத்தில் தான் வாழ்க்கை யென்பது என்னவென உணர்ந்தேன். பகற்பொழுதெல்லாம் என் தாய் வீட்டிலும், இரவு நேரம் முழுவதும் இந்த பூலோக சுவர்க்கத்திலும் கழித்து வந்தேன்.

இந்த சந்துஷ்டியான வாழ்க்கையால் நான் மிகவும் பூரிப்படைந்தேன். எனது உயர் குணங்களெல்லாம் சிறப்புற்று விளங்கின. என்னுள்ளே ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு என் தந்தையும் பெருமைப்பட்டார்.

ஒரு நாள், அவர் தமது நண்பரின் புத்திரியை எனக்கு மணமுடிக்க நிச்சயித்திருப்பதாகத் தெரிவித்தார். என் மனதுக்குள்ளே ஏற்பட்ட கலவரத்தை நீங்களே கற்பனைசெய்து பாருங்கள். அவரது யோசனையை நிறைவேற்ற வொட்டாமல், சாக்குப் போக்குச் சொல்லித் தள்ளிவந்தேன். ஆனால், இந்நிலைமை நெடுநாள் நீடித்திருக்கவில்லை. என் தந்தைக்கு சந்தேகம் ஏற்பட்டது. எனது நடவடிக்கைகளைக் கண்காணிக்கும்படி சிலரை ஏவினர்.

என் வாழ்க்கையின் தலைமீது விழுந்த கொடிய பேரிடியை எவ்வாறு வர்ணிப்பேன்? அது என் வாழ்வையே சிதறடித்து விட்டது! அதை நினைக்கும் போதே தலை சுழல்கிறதே! பேனா, பிடியிலிருந்து தளர்ந்து விழுகிறதே!

ஒரு நாள் மாலை நான் இங்குவந்து பார்க்க கூண்டு வெறுங் கூண்டாக இருந்தது; பட்சி பறந்துபோய் விட்டது! அவள் எங்கு போனாள், எப்படிப் போனாள் என்பது கடவுளுக்கு மட்டுந்தான் தெரியும்! நான் அடைந்த துன்பத்துக்கு அளவில்லை. சோகம் இருள்போன்று சூழ்ந்தது. என் தந்தையின் கொடுஞ்செயல், அவரை அறவே வெறுக்கும்படி செய்தது. எனது மனதுக்கிசைந்த துணைவியைப் பிரித்து விட்டார்; ஆனால் இன்னொரு பெண்ணை மணக்கும்படி அவரால் வற்புறுத்த முடியவில்லை. அது முதல் என் மனம் நிலை தடுமாறி விட்டது; வாழ்க்கை ஒரு பெரும் பாரமாகத் தோன்றியது. தன்னந் தனியாக, கவனிப்பதற்கு வேறு யாருமின்றி இந்தத் தீவில் வாழ்நாளைப் போக்குவது என்று நிச்சயித்தேன். இங்கு எனக்கு உற்றதுணை எனது மனக்கவலை தான்.

காலம் சுழன்று செல்கிறது. விளக்கில் எண்ணெய் அனேகமாக எரிந்து விட்டது; சுடர் தாழ்ந்து விட்டது. ஒருவேளை முடிவும் நெருங்கி விட்டது போலும்!

செங்குந்த மரபினர்க்கு ஓர் வேண்டுகோள்.

(பெ. மு. கிருஷ்ணன்)

உலகமெங்கும் இக்காலத்தே ஒருவிதப் பரபரப்பு உண்டாகியிருக்கிறது. எத்தேசத்தவரும் தம் தேசம் ஏற்றத்தையடைய தங்களால் இயன்றவாறு முயன்று வருகின்றனர். சென்ற சில வருஷங்களாக நம் தேயத்தவரும் அவ்வகையான பரபரப்பை மேற்கொண்டு முயன்று வருகின்றனர். இம்முயற்சி நாளடைவில்

நன்மையே பயக்கு மென்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. அந் நன்மைகளை எல்லாம் வல்ல இறைவன் விரைவில் நமக்கு அருள் புரிவானாக.

உலகத்தில் நாகரீகம் பெற்ற நாடுகளில், நமது நாடு முற்பட்ட தலைநாடென்றும், புண்ணிய பூமி என்றும், ஞானபூமி என்றும் போற்றப்படுகின்ற புனிதப் பெருநாடாகிய இந்தியாவில், செங் குந்த மரபினரில் தோன்றும் நாரியர் மணியர் பலரைச் சமூகத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும் பொட்டுக்கட்டி கன்னிப் பருவத்தில் கற்பிழக்குமாறு செய்ததால் இச் சமூகம் முன்னேற்ற மடையாமல், கேவலமாயும், இழிவாயும், பிறர் நகைப்புக் கிடமா யும் குலப்பெருமையை இழந்துவந்திருக்கின்றது.

மனிதர் தாங்கள் செய்துவரும் நன்மை தீமைகளுக்கேற்ற மோக்ஷ நகரம் கிடைக்குமென்பதைச் சிந்திக்குமளவில் இம்மை யிலேயே காலத்தைச் சன்மார்க்கத்தில் போக்கவேண்டு மென்பது தானாய் விளங்கு மல்லவா? மனிதனுக்கு ஏற்பட்டுள்ள ஆயுட்காலத் தைப் போக்கத் தகுதியான வழி ஏற்பட்டிருந்தும், அந்நாட் களில் பெரும் பங்கை ஒன்றும் செய்யாமல் போக்கியும், யாதா வது செய்வதாகிய சிறிது காலத்தைப் பரம துன்மார்க்கத்தில் போக்குகிறவர்களை என்னென்று சொல்லுவோம். வேதத்திலில் லாத சங்கதிகளையும் மத நூல்களில் சம்பந்தம் பெறாத விஷயங்களை யும், "வேதத்திலும் மதத்திலும் இருப்பதுபோல்" சிலர் நினைத்து நல்ல காரியங்களையும், நல்ல கொள்கைகளையும் எதிர்ப்பதால் முறையே வேதம், மதம் இரண்டும் கெட்ட பெயரை அடைகின் றன. மதத்தின் பெயராலோ அல்லது தெய்வத்தின் பெயராலோ விபசாரத் தொழில் புரிவதற்கு ஆதாரமும், ஆதரவு மில்லை என்பது தெளிவாக விளங்கும்.

மைசூர் சர்க்கார் அடியிற்கண்டபடி உத்திரவு பிறப்பித் தார்கள்:—

"தேவதாசிகளை எந்தக் காரணத்திற்காகக் கோவிலுக்குப் பொட்டுக் கட்டி விட்டிருப்பினும், இப்பொழுதுள்ள தேவதாசிகள், நெறி தவறி இருப்பதாகக் காண்பதால், சர்க்கார் அவர்களைக் கோவில்களைப் போன்ற புனிதமான விடங்களிலிருந்து நீக்கியது

பொருத்தமென்று நினைக்கிறோம்". இதைப்போலவே, இந்திய சமஸ்தானங்களாகிய கொச்சி, திருவாங்கூர் முதலியவையும் பம்பாய் சாந்தூர் முதலியவிடங்களிலும், தேவதாசி முறையைத் தடுத்து சட்டம் செய்திருக்கின்றனர். புதுக்கோட்டை சட்டசபையில்கூட இதைப்பற்றிய மசோதா வந்திருக்கிறதாகத் தெரிகிறது. மகாத்மா காந்திகூட பெண்களை விபசாரத்தினின்று மீட்க வேண்டியது மதுவிலக்கைக்காட்டிலும் அவசரம் என்று'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீமதி டாக்டர் முத்துலெக்ஷிமி அம்மாள் அவர்களும் இன்னும் பல அறிவாளிகளும் பொட்டுக் கட்டும் வழக்கத்தை அறவே ஒழிக்க பகீரதப்பிரயத்தனம் செய்துவருகிறார்கள்.

தேவதாசிகள் ருத்ரகன்னிகைகள் என்ற பெயரால் குறிப்பிடப்படும் ஸ்திரீகள் ருத்ரனைப்போல் அக்ரம ஒழுக்கத்தைச் சுட்டெரிப்பவர்களாகவும், தமது தூய்மை ஒழுக்கத்தால் பக்த ஜனங்களின் ஆதரவைப் பெற்றவர்களாகவும் இருந்ததாகத் தெரிகின்றது. அதனால்தான் அவர்களைக் கடவுளுக்குத் தொண்டுபுரியுமாறு முன்னோர் திட்டம் செய்திருக்கின்றனர்.

முன்னர் ஒரு காலத்தில் அவ்வாறு இருந்தது என்ற காரணத்தால், இப்பொழுதுள்ள தேவதாசிகளின் நிலையும் அதுபோல் கருதத் தக்கதென்று எவராலும் வற்புறுத்த முடியாது. ஒழுக்கத்தைக் குறித்து ஏற்பட்ட கௌரவம், ஒழுக்கமில்லாதபொழுது இல்லாதாகிவிடுகின்றது. ஆனால் இப்பொழுது அவர்கள் அனுபவிக்கின்ற துன்பத்தையும் அவர்களைச் சூழ்ந்துள்ள அறியாமையாகிய இருள் குவியலையும், நாம் நமது ஞானப்பிரசார உதவிகளால் நீக்க வேண்டும்.

அன்பர்களே! பொட்டுக் கட்டும் வழக்கத்தை அறவே ஒழித்து தெருச் சிரிக்கும் நம் சிங்கார சகோதரிகள், ஒழுக்கமடைந்து சமூகம் முன்னேற்றமடைவதற்கு இச் சமூகத்திலுள்ள எல்லா வாலிபர்கள், வயோதிகர்கள், தாய்மார்கள் அனைவரும் வீறிட்டெழ வேண்டுகின்றேன்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே.

அகில இந்திய மாதர் மகாநாடு.

அகில இந்திய மாதர் மகாநாட்டின் 13-வது கூட்டம் புது டில்லியில் டிசம்பர் 28உ ஆரம்பமாயிற்று. ராணி லட்சுமிபாய் ராஜவதி தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையை நிகழ்த்தினர். அரசியலில் ஒரு நிர்மாணத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்றும், இம்மகாநாடு ஒரு முதலாளித்வ மனப்பான்மை கொண்ட மகாநாடென்று பண்டித ஜவஹர்லால் நேரு கண்டித்து கூறுவதை எதிர்க்கும்படி இத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர். பாமர இந்திய ஸ்திரீகளுக்கு சேவை செய்யவோ அல்லது அவர்களுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ளவோ மகாநாடு ஒரு முயற்சியும் செய்யவில்லையென்று குறை கூறப்படுவதைத் தாம் ஒப்புக்கொள்ளுவதாக அவர் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:—"ஸ்திரீகளிடை இப்பொழுது விழிப்பேற்பட்டிருப்பது காங்கிரஸ் செய்துவரும் காரியங்களாலே யொழிய மகாநாட்டால் அல்ல என்று பண்டித நேரு கூறுவதை நீங்களும் நானும் சந்தோஷமாக ஒப்புக்கொள்ளலாம். அதற்காக நாம் காங்கிரஸுக்கு நன்றிசெலுத்தவேண்டியவர்களாகஆகிறோம். ஆனல் இச்சங்கம் ஒரு முதலாளித்வ மனப்பான்மை கொண்டது என்று பண்டிதநேரு கூறுவது உண்மையுமல்ல, நியாயமுமல்ல. காங்கிரஸ் 50 வருஷங்களாக விடாமுயற்சியுடன் வேலை செய்தும், அது முதாலாளித்வ மனப்போக்கைக் கொண்ட ஒரு ஸ்தாபன மாகவே இருக்கிறது."

மறைமுகமான நடவடிக்கை உபயோககரமானதாயும், அவசியமானதாயுமிருந்தபோதிலும் காங்கிரஸ் போன்ற ஸ்தாபனங்களின் வேலை நேரடியானதாகவும் அதிக முயற்சியுள்ளதாகவும் ஊக்கமுள்ளதாகவும் ஆகும் வரை தங்களுக்கு உரிமையான ஸ்தானத்தை காங்கிரஸ் போன்ற ஸ்தாபனங்கள் மூலமாக அடைய முடியாதென்று, ராணி சாகிப் எடுத்துக்கூறினர். இந்நோக்கத்தை அடையும்பொருட்டு இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் பல அரசியல் கட்சிகளுடன் ஒன்று சேருவதாகத் தெளிவாக

அறிவிக்க வேண்டுமென்றும், அத்துடனில்லாமல் இந்த ஆட்சி முறை இந்திய ஸ்திரீகளது வாழ்க்கையை எவ்வளவு தூரம் பாதிக்கிறதென்றும் இந்த ஆட்சி முறை ஏன் திருப்திகரமானதாயில்லையென்றும் அவர்களுக்கு இச்சங்கம் விளக்கிக் கூறவேண்டுமென்றும், ராணி சாகிபா எடுத்துரைத்தார்.

மேலும் ஸ்திரீகளுக்குப் பொது அரசியல் கல்வியைப் போதிக்க ஒரு திட்டம்போட வேண்டுமென்றும், சுதேசி இயக்கத்தை இம்மகாநாடு பலமாக ஆதரிக்க வேண்டுமென்றும், கிராமப் புனருத்தாரண வேலையில் சங்கம் ஈடுபட்டு சேரியில் வசிக்கும் ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டுமென்றும், ஸ்திரீகளுக்கு சட்ட சம்பந்தமாகவுள்ள குறைகளை நீக்குவதற்கும் மகாநாடு தீவிரமாகப் போராடவேண்டுமென்றும், ராணி சாகிபா எடுத்துரைத்தார்.

தலைவர் தமது உரையில் மேலுங் கூறியதாவது:—

"கல்வித்துறையிலும் நாம் திட்டமான வேலைகளைச் செய்ய வேண்டும். இளைஞர்கள், முக்கியமாகப் பெண்கள், கல்வியைப் பரப்பும் வேலையில் ஒரு வருஷமேனும் குறைந்த பட்சம் கட்டாய ஊழியம் புரியும்படி அழைக்கப்பட வேண்டும். தங்கள் கல்லூரிப் படிப்பு முடிந்ததும், நகரத்திலோ கிராமத்திலோ ஒரு வருஷம் இத்தொண்டு புரியும்படி நிர்ப்பந்தப்படுத்தலாம். சீனுவில், பெண்கள் கூட்டம் கூட்டமாக இத்தொண்டில் ஈடுபட்டு அளவற்ற உதவி புரிந்ததை இங்கு ஞாபகப்படுத்தலாம். பெண்கல்வியைப் பொறுத்த அளவில், இந்த மகாநாட்டின் ஆதரவில், பெண்களும் ஆண்களும் கலந்த நிபுணர்கள் கமிட்டி யொன்றை அமைத்து, இந்தியப் பெண்களுக்குத் தேவையான கல்விமுறைத் திட்டம் வகுக்கும்படி செய்தல் நலம். தேவையற்ற மேனுட்டு முறை அளவுமீறி நம் கல்வித் திட்டங்களில் புகாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகின்றது.

"பயிற்சிபெற்ற ஆசிரியைகள் தேவை. விதவைகள் இந்த உயரிய தொண்டில் ஈடுபடுவது அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லது.

தான். கல்யாணமான, ஆகாத பெண்களும், தங்கட்குப் போதிய சாவகாச மிருந்தால், இந்த ஊழியத்தை மேற்கொள்ள வேண்டும்.

கிராமச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதி தான் கல்வியைப் பரப்புதல். இந்திய வாழ்க்கையில் பெரும்பகுதியும் கிராம வாழ்க்கை தான். சமூகச் சீர்திருத்த வேலை சம்பந்தமாக சட்ட நிபுணர்கள் கொண்ட கமிட்டியை அமைத்து தற்போதுள்ள சட்ட சம்பந்தமான குறைபாடுகளை நீக்குதற்கான திருத்தங்களை வகுக்கும்படி செய்ய வேண்டும்.

வாழ்த்துச் செய்தி

மகாநாட்டுக்கு ஆசிகூறி மகாத்மா காந்தி, லேடி ஹாலிபாக்ஸ், பரோடா மகாராணி, திருவிதாங்கூர் மகாராணி, ஸர். கிர்ஜா சங்கர் பாஜ்பாய், லேடி மிர்ஸா இஸ்மாயில், லேடி கிளான்ஸி, பீகம் ஷா நவாஸ் முதலியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

"ஸ்திரீகளே தங்களை விடுவித்துக் கொள்ள முடியுமே யொழிய ஆடவர்களல்ல. மனமிருக்குமானால் 'அஹிம்சா' தர்மம் ஈடேற ஸ்திரீகள் உதவிசெய்யக் கூடும். சர்க்காவின் மூலமாக தங்களுடைய ஏழைச் சகோதரர்களுக்கு அவர்கள் உதவியும் சேவையும் செய்யலாம். கதரைக் கட்டிக்கொண்டு ஏழைகளின் குடிசைகளுக்கு அவர்கள் உதவிகொண்டு வரலாம். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை அவர்கள் செய்து வைக்கலாம். கோஷா பழக்கத்தை ஒழித்து தீண்டாமைப் பேயை வெருட்டி யடிக்கலாம்.

"டில்லியில் நடைபெறும் ஸ்திரீகளின் மகாநாடு இக்காரியங்களில் ஏதாவதொன்றை நிறைவேற்றிவைக்குமா? "என்று மகாத்மா காந்தி அகில இந்திய ஸ்த்ரீகள் மகாநாட்டிற்கு ஒரு செய்தி யனுப்பியுள்ளார்.

தீர்மானங்கள்

டிசம்பர் 29உ காலை நடந்த மகாநாட்டில் யுத்தத்தை எதிர்த்து ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானம் கூறுவதாவது:—இன்று உலகத்திலுள்ள ஒரு நெருக்கடியான பயங்கரமான நிலையை உணர்ந்து, யுத்தம் எந்தப் பிரச்னை

யையும் தீர்க்காதென்றே நாங்கள் வற்புறுத்திக் கூற விரும்பு கிறோம். எல்லாவித அடக்கி ஆளுதலையும் சுரண்டுதலையும் நாங்கள் தீவிரமாக எதிர்க்கிறோம். ஆஸ்திரியாவும் ஸெகோஸ்லவேகியாவும் காட்டிக் கொடுக்கப்பட்டதையும், ஸ்பெயினில் உள்நாட்டு சண்டை நீடித்து வருவதையும், யூதர்கள் ஈவு இரக்கமின்றி துன்புறுத்தப் படுவதையும், பாலஸ்தீனத்தில் துக்கமான குறுக்கீட்டையும், அங்கு நடக்கும் கொடுமைகளையும், சீனுமீது அக்கிரமமாகச் சண்டை தொடுக்கப்பட்டிருப்பதையும் கண்டு நாங்கள் மனோவேதனையடை கிறோம்.

அஹிம்சா தர்மக்கொடியின் கீழ் ஒன்றுபட்டு, இந்த சக்தி யால்தான், பகைமையை உண்டுபண்ணி நாடுகளை ஆக்ரமிக்கும் ஆசையுள்ள சக்திகளை அடக்கி, உண்மையான நிர்ந்தரமான சமா தானத்தை ஸ்தாபிக்க முடியுமெனக் காட்டிக்கொள்ள வேண்டு மென்று, உலகத்திலுள்ள ஸ்திரீகளை நாங்கள் கேட்டுக்கொள்ளு கிறோம்.

இந்தத் தீர்மானத்தை ஐக்கிய மாகாண ஸ்தல ஸ்தாபன மந் திரி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பிரரேபித்துப் பேசுகையில் சீனுபோன்ற தேசங்களில் என்ன நிகழ்ந்தாலும், இந்தியா உள்பட உலகம் பூராவிலும் அதன் பலாபலன்கள் ஏற்படுகின்றனவென் றும், மேலும் இந்தியாவில் வேறொருவிதமான யுத்தம் நடந்து வருகின்றதென்றும், அதுதான் சுதந்திரப்போராட்ட மென் றும், இந்த யுத்தத்தில் அஹிம்சை என்னும் ஆயுதமே வெற்றிகர மாக உபயோகிக்கப்படுகிறதென்றும், ஆகவே இது சம்பந்தப் பட்டமட்டில் இந்தியாவானது உலகத்திற்கு ஒரு தீர்மானமான செய்தி விடுக்கவேண்டி யிருக்கிறதென்றும், எடுத்துரைத்தார். அஹிம்சை என்பது தணிந்துபோவது என்ற அர்த்தமல்ல வென் றும், உலகத்தில் அடக்கியாளப்பட்ட தேசங்களுக்கு இந்திய ஸ்திரீகள் ஒரு செய்தி விடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை யென் றும் அவர் எடுத்துரைத்தார்.

ராஜகுமாரி அமிருத கௌரி மேற்படி தீர்மானத்தை ஆதரித் துப் பேசுகையில், யுத்தம் ஏற்பட்டால் நாங்கள் என்ன செய்வோ மென்பதை ஒவ்வொருதேசத்து ஸ்திரீகளும் தங்களுடைய சர்க்

கார் மனதில் பதியும்படி செய்யவேண்டுமென்றும், அப்பொழுது தான் யுத்தம் ஏற்படாமல் செய்யமுடியுமென்றும், ஒரு புதிய நீதி நெறியையும், நியாயத்தையும் உலகத்தில் நிலைநாட்ட முடியுமென் றும், எடுத்துரைத்தார். ஸ்திரீகளுக்கு அபாரசக்தி யிருக்கிறதென் றும், ஆனால் அதை அவர்கள் இதுவரை உணராததே பரிதபிக்கத் தக்க விஷயமென்றும், அவர் எடுத்துரைத்தார்.

பீகம் ஹமீத் அலி, மிஸ் டிங்மன், ஸ்ரீமதி பிரோஸுதீன் முதலியவர் ஆதரிக்கத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அகில இந்திய ஸ்திரீகள் சங்கத்தினர் இதுவரை ராஜீய விஷ யங்களில் கலந்து கொள்ளாமலிருந்தனர். இப்போது அந்தக் கொள்கையை மாற்றிவிடும்படி ஒரு தீர்மானம் அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இது சம்பந்தமாக மகாநாட்டுத் தலைவர் ஒரு வழி காட்டியிருந்தார். பிரதிநிதிகள் சிலர் ராஜீய விஷயத்தில் தலையிடுவதால் கட்சி பேதங்கள் ஏற்படு மெனக் கூறினாலும் பொதுவாக மக்களையும் குறிப்பாக ஸ்திரீகளை யும் பாதிக்கும் எல்லா விஷயங்களைப் பற்றியும் விவாதிக்க உரிமை இருக்கவேண்டுமென்ற திருத்தப் பிரேரணை முடிவில் ஒப்புக்கொள் ளப்பட்டது.

மிஸஸ் சுப்பராயன் மசோதாவில் விவாக ரத்து சம்பந்தமாக வுள்ள பாகங்கள் தேஷ்முக் மசோதாவில் சேர்க்கப்படவேண்டு மென்றும், காஸ்மி மசோதாவை ஆதரிப்பதாகவும், இந்திய ஸ்திரீ களுக்குச்சட்டப்படி உள்ள அசௌகர்யங்களைப்பற்றி ஆலோசிக்க ஸ்திரீகள் உட்பட சிலரடங்கிய கமிட்டியைக் கவர்ன்மெண்டார் நியமிக்கவேண்டுமென்றும், ராணுவ மசோதாவைக் கண்டிப்பதாக வும், யுத்தத்தை வெறுப்பதாகவும், விபசாரத்துக்காக ஸ்திரீகளை யும் குழந்தைகளையும் உபயோகிப்பதைத் தடுக்க சென்னை கவர்ன் மெண்டில் செய்ததைப் போல மற்ற மாகாணக் கவர்ன்மெண்டு களும் ஒரு ஸ்திரீ உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டுமென்றும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் பெண் உத்யோகஸ்தர்களை நியமிக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழி லாளர்களும் முதலாளிகளும் அந்நியோந்நியமாக இருப்பதற்கான

ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பள்ளிக்கூட மாணவர்களுக்கு மண வாழ்க்கையைப் பற்றிய விவரங்களைப் போதிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. கைக்குத்தரிசி வெல்லம், முதலியவைகளையே உபயோகிக்க வேண்டுமென பிரசாரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. இந்த சாமான்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் கிடைக்கும்படி செய்யவேண்டுமென அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

—

மதிப்புரை

"அம்பிகாபதியும் அரசிளங்குமரியும்"

[ஆசியர்: திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள். பக்கம் 190. விலை ரூ. 1-4-0. வெளியிட்டோர்: நவீன கதா புத்தகசாலையினர், இரங்கூன். கிடைக்குமிடம்: ஷையார்]

சரித்திர சம்பந்தமான காதல் நாடகம். ஐந்து அங்கங்களாக ஆசிரியர் வகுத்து, இடையிடையே தாம் யாத்துள்ள செய்யுள்களையும் சேர்த்திருக்கின்றார். கவிச்சக்ரவர்த்தி கம்பருடைய புத்திரன் அம்பிகாபதி; இராஜ ராஜசோழனது புத்திரி வனஜாக்ஷி. புவியரசன் புத்திரி அழகுப் புலவியாகவும் விளங்குகின்றாள். அவள், கவியரசன் புத்திரனைக் காதலித்ததில் வியப்பில்லை. மறைமுகமாக இருவருக்கிடையும் நடைபெறும் காதல்நாடகத்தை மன்னன் அறிந்து சீற்றங்கொள்கிறான். ஓர்நாள் அரண்மனையினுள்ளே, காதலரிருவரும் சந்திக்கின்றனர். அரசன் நேரிற் கண்டகாட்சி, அவன் சந்தேகத்தை விளக்கி உறுதிப்படுத்திற்று. கம்பநாடர் குறுக்கிட்டு அரசன் கோபத்தைத் தணிக்கின்றார். அம்பிகாபதி பேரின்பத்தைப் பற்றி நூறு செய்யுட்கள் பாடுதல்வேண்டும். அந் நூறும் முடியுமுன் சிற்றின்பத்தைப்பற்றி ஒன்று பாடினும் உயிர் வாங்கப்பெறும். நூறு பாடிமுடித்தால் உயிரோடு உயிர்க்காதலியும்

கிடைப்பாள் என்று மன்னன் ஆணையிடுகின்றான். அவ்வாறே கவியரசன் மைந்தன் கவிபாடுகிறான். புவியரசன் புத்திரி ஒவ்வொன்ருக மலரிட்டு எண்ணுகின்றாள். ஆனால், காதலின் வேகம் அவளை நிலைதடுமாறச்செய்துவிட்டது. அதன் பயனாக தொண்ணூற்றொன்பது பாட்டுகள் பாடியதை நூறென மயங்கி தன் காதலனடைந்த வெற்றிக்கு மகிழ்ச்சி தெரிவிக்க சற்றே எட்டிப்பார்க்கின்றாள். அவ்வளவுதான். அம்பிகாபதி பேரின்பத்தைவிட்டு சிற்றின்பத்தைப் பற்றி பாடிவிட்டான். அரசன் ஆணைப்படி அவன் கொலையுண்டான். காதலனுக்குத் தன்னாலேற்பட்ட துன்பத்தை யெண்ணி, காதலியும் தோழியுடன் அக்கினி மூழ்கினாள். இதுதான் கதைச் சுருக்கம். காதல்போயிற் சாதல் என்ற பாரதி வாக்குக்கு இலக்காக இச்சரித்திரக் கதை அமைந்துள்ளது. பண்டித நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் மூன்றாவது முறையாகப் பதிப்பிக்கப் பெற்றிருப்பதிலிருந்தே, இதன் பெருமை நன்கு புலனாகின்றது. அழகிய வர்ண முகப்புடன் திகழ்கின்றது. தமிழ்த் தாய்க்கு உரிய இனிய மலர்களில் ஒன்று. புத்தகசாலைகளில் இடம் பெறத்தக்க நூல் என்பதி லையமில்லை.

கருணை உள்ள இடத்தில் - விருதவை இல்லை.

:: நிகழ்ச்சிகள் ::

குன்றக்குடியில் மாதர் மறுமண சகாய சங்கம்

மாதர் மறுமண சகாய சங்கக் கிளை ஸ்தாபனம் குன்றக்குடி மோகனதாஸ் கல்வி நிலையத்தில் ஜனவரி 6-வ வெள்ளிக்கிழமை மாலை ஸ்தாபிக்கப்பட்டது. விழாவுக்கு காரைக்குடி, 'குமரன்' ஆசிரியர் திரு முருகப்பா தலைமைவகித்தார். தலைவருக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. உபாத்தியாயர் பாண்டியன் சங்கத்தைத் திறந்து வைத்து, பெண்கள் முன்னேற்றம் பற்றி விரிவாகப் பேசினர். தலைவர் தமது முகவுரையில், பெண்களின் அடிமைத்தளையை அகற்றுவது பற்றியும், விதவா விவாகத்தைப் பற்றியும் விஸ்தாரமாகப் பேசினர்கள். அதன் பின்னர் திரு உலகுசுந்தரம் சிறிது நேரம் பேசினர். திரு. பெ. மு. கிருஷ்ணன் இருபாலாரின் ஒழுக்கம் காக்கப்பட வேண்டுமென்பது பற்றியும், சமூக சீர்திருத்தமே மிக முக்கியமானதென்றும், குறிப்பிட்டு, தலைவர் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இக்காரியத்திற்காகச் செலவிடுகிறார்களென்றும், மகளிர் இல்லம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பற்றியும் விஸ்தாரமாகக் கூறினர். வந்தனோபசாரம் கூறப்பட்டது. கானுடுகாத்தான் மடத்தில் திரு. சொ. முருகப்பா படக்காட்சி காண்பித்தார்கள்.

லண்டனுக்கு ஸ்திரீ தலைவர்

லண்டன் கவுண்டி கவுன்ஸிலின் தலைமைப்பதவிக்கு ஸ்ரீமதி வெவின்லோ என்ற பெண்மணியை அபேட்சகராக நிறுத்துவதென்று கவுன்சிலில் மெஜாரிட்டியாயிருக்கும் தொழிற்கட்சி தீர்மானித்திருக்கிறது.

பெண் குமாஸ்தாக்கள் நியமனம்

குமாஸ்தா உத்தியோகத்திற்கு, சென்னை உத்யோக நியமனக் கமிஷன் இரண்டு பெண்களைத் தெரிந்தெடுத்திருக்கிறது. இருவரும் ஆங்கிலோ இந்தியர்கள். ஒருவர் இன்டர்மீடியட் பரீட்சையும் மற்றவர் யஸ். யஸ். யல். ஸி. பரீட்சையும் தேறியிருக்கின்றனர்.

பெண் போலீஸ்

திருவிதாங்கூரில் போலீஸ் படையில் சேர்வதற்கு, பல சமூகங்களையுஞ் சேர்ந்த பெண்கள் பலர் மனுச்செய்திருக்கின்றனராம் 18 முதல் முதல் 30 வயது வரையுள்ள பெண்கள்—இவர்களில் பலர் தாய்மார்களாவர். எல்லோரும் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியாவது கற்றவர்தான். பலர் உயர்தரக் கல்வியும் கற்றவராவர். முதலாவது இவர்களில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுக்குப் பிரத்தியேக 'யூனிபாரம்' கிடையாது. கையில்மட்டும் ஒரு 'பாட்ஜ்' கட்டியிருப்பார்கள்.

மாணவரும் மாணவிகளும்

பள்ளிக்கூட மாணவர்கள், மாணவிகளிடம் முறைதவறி நடந்துகொள்வதைப் பற்றி 'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா காந்தி எழுதியிருக்கிறர். பஞ்சாபி பெண்

ஒருவளிடமிருந்து தனக்கு வந்த கடிதத்தில் ஒரு மாணவன் ஆபாசமாக ஏதோ முணுமுணுத்துக் கொண்டே சைக்கிளில் தன்னைத் துரத்தி வந்ததாகவும், அவன்மீது தான் ஒரு புஸ்தகத்தை எறிந்ததாகவும் அப்பெண் எழுதியிருக்கிறாள். தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பெண்கள் அஹிம்சையைப் பின்பற்றலாமாவென்று அப்பெண் கேட்கிறாள்.

சந்தியிலிழுங்கள்

மகாத்மா எழுதியுள்ள பதிலில் இப்படி குறிப்பிட்டிருக்கிறார் :—

"அதிகமாய்க் கொண்டு வரும் இக்கெடுதலுக்கு அது சரியான பரிகாரமல்ல. ஆபாசமாக ஏதாவது பேசினால், அதற்காக பிரமாதமாய் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், அலக்ஷியமாகவும் இருந்து விடக் கூடாது. இந்த மாதிரி சம்பவங்களை யெல்லாம் பத்திரிகைகளில் பிரசுரித்து விட வேண்டும். இப்படிச்செய்பவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால், பெயர்களையும் பிரசுரித்துவிட வேண்டும். இந்தக் கெடுதலை வெளிப்படுத்துவதில் பொய் சங்கோசம் எதுவும் இருக்கக் கூடாது. முறை தவறிய நடத்தையைக் கண்டிப்பதற்கு, பொதுஜன அபிப்ராயத்தைப் போல் சிலாக்யமானது வேறில்லை. குற்றம், கெட்ட பழக்கம், இரண்டும் இருட்டைத் தான் நாடும். வெளிச்சத்தைக் கண்டால், அவை ஓடி ஒளிந்து விடும்.

பெண்கள் சாதுக்களா?

"இப்போதைய நவநாகரிகப் பெண்கள், குறைந்தபக்ஷம் அரைடஜன் காதலர்களாவது தங்களுக்கு இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அபாயத்தைப் பொருட்படுத்தாமல் ஷோக் வாழ்க்கை நடத்த ஆசைப்படுகிறார்கள். மழை, காற்று, வெய்யில் முதலியவைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் ஆடையணிவதில்லை. பிறர் தங்களைப் பார்க்க வேண்டு மென்பதற்காக அந்த தினுசில் ஆடை அணிந்து கொள்ளுகிறார்கள். இயற்கை அளித்திருப்பது போதாதா? அத்துடன் என்னென்னவோ சாயங்களை யெல்லாம் வாரிப் பூசிக்கொண்டு விசித்திரமாகத் தோற்றமளிக்கிறார்கள். இம்மாதிரி பெண்களுக்கு அஹிம்சை வழி சரிப்படாது.

கண்ய உணர்ச்சி வேண்டும்

"அஹிம்சை வழி ஒருபுற மிருக்கட்டும். வாலிபர்கள் ஏன் இப்படி கண்யக் குறைவாய் இருக்கவேண்டும்? தங்களைத் துன்புறுத்துவார்களோ என்று கௌரவமானபெண்கள், எப்போதும் பயப்படும்படி ஏன் இவர்கள் நடத்தவேண்டும்? பெரும்பாலான மாணவர்களுக்கு கண்ய உணர்ச்சி இல்லாமல் போய்விட்டதென்றால், அது வருந்தத்தக்க விஷயம். மாணவர்கள் தங்கள் கௌரவத்தைத்தான் பெரிதாக மதிக்கவேண்டும். தங்கள் சகாக்கள் யாராவது முறை தவறாக நடந்தால் அவர்களே அதை கவனிக்கவேண்டும். ஒவ்வொரு பெண்ணினுடைய கௌரவத்தையும் தங்களுடைய சொந்த சகோதரிகள், தாய்மார்களின் கௌரவத்தைப்போல் மதித்துக் காப்பாற்றக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல

பழக்கங்கள் படியாவிட்டால், அவர்கள் பெறும் கல்வியெல்லாம் வியர்த்தமாய்விடும்.

ஆசிரியர்களின் கடமை

"வகுப்புப் பாடங்களை கற்றுக் கொடுப்பது மாத்திரந்தானு பள்ளிக்கூட ஆசிரியர்களின் கடமை? தங்களுடைய மாணவர்கள் கௌரவமாகநடந்துகொள்ளும்படி தயார் செய்ய வேண்டியதும் அவர்களுடைய கடமையல்லவா?"

ஸ்ரீமதி பேர்ல் பக்குக்கு நோபல் பரிசு

இவ்வருஷம் இலக்கியத்துக்குரிய நோபல் பரிசு அமெரிக்க ஆசிரியை ஸ்ரீமதி பெர்ல் பக்குக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க

பாய்பந்த் ஸ்திரீகள் சங்கக் காரியதரிசி மிஸ் கோபி மங்காராம்முகி. பி. எ. சிந்துபிரதம மந்திரி கனம் அல்லாபக்ஷுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஹிந்து சமூகத்தாரிடையே 5000 ரூபாய்முதல் 25000 ரூபாய் வரையில் வரதட்சணை கொடுக்கும் கொடிய வழக்கமிருந்து வருகிறதென்றும், வரதட்சணை கொடுக்க பெற்றோர்களுக்கு இயலாமலிருப்பதால் பல பெண்களுக்குக் கல்யாணமாகாமலிருக்கிறதென்றும் பல குடும்பங்களுக்குத் துன்பம் விளைக்கும் இக்கொடுமையை ஒழிக்கும் முயற்சியில் மாஜி மந்திரி டாக்டர் வத்வானி கொடுத்துள்ள மசோதாவைப் பிரதம மந்திரி சர்க்கார் மசோதாவாகக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

உடன்கட்டையேற முயன்றாள்

இடவா ஜில்லாவிலுள்ள தலைநகர் என்னுமிடத்தில் ஒருவர் மார்க்கட்டுக்குப் போனபோது மாரடைப்பால் மாண்டு போனார். அவரது மனைவி பிரேதத்துடன் சுடுகாட்டுக்குச் சென்று, கணவனின் காஷ்டத்தில் விழுந்து தானும் மடியப் போவதாகக் கூறினாள். உற்றார் உறவினர் எவ்வளவோ கூறியும் அவள் கேட்கவில்லை. கடைசியாகப் போலீஸார் குறுக்கிட்டுத் தடுத்தனர்.

திருப்பத்தூர் தா. கா. க. தீர்மானம்

டிசம்பர் 13உ நடைபெற்ற திருப்பத்தூர் தாலூகா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு ஸ்ரீமதி வ. பெரியநாயகி அம்மாள் தலைமை வகித்தார். கன்னிகா தட்சணை வரதட்சணை இவற்றைத் தடை செய்ய வேண்டுமென்று, மத்திய அஸம்பிளிக்குச் சிபார்சு செய்யும்படி மாகாணக் காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டுக் கொள்வதாயும், பெண்களுக்கு ஆண்களைப்போல் சொத்தில் சம உரிமை அளிக்கச் சட்டமியற்றும்படி மத்திய அஸம்பிளியைக் கேட்டுக்கொள்வதாயும், சீர்திருத்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட.

சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனு லேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.

REGD. NO. M. 3603.

சிறந்த புத்தகங்கள்.

மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன, இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன, 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொருக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினால் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0 தபாற் செலவு வேறு.

காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனாவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற்கூலி வேறு.

மாதர் மறுமணம் பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

விலை பென்சில் 1-க்கு	0—0—6
டஜன் 1-க்கு	0—5—0
குரோஸ் 1-க்கு	3—6—0

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.

Editor: M. Maragathavalli.